மாணிக்கனார் பிள்ளைத் தமிழ்



ஆசிரியர்:

சொல்லோவியர், பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம் M.Com., M.Phil.,

மாணிக்கனார் பிள்ளைத்தமிழ்

ஆசிரியர் :

சொல்லோவியர், பொற்கிழிக் கவிஞர், விரிவுரை வித்தகர்,

திருமந்திரச் சொல்மணி, நற்றமிழ் நாவலர், திருக்கயிலைமணி

சொ.சொ.மீ. சுந்தரம் M.Com., M.Phil.,

வணிகவியல் பேராசிரியர் (ஓய்வு)

சௌராஷ்டிராக் கல்லூரி, மதுரை - 625 004.

நூன் பெயர்	: மாணிக்கனார் பிள்ளைத் தமிழ்
முதற்பதிப்பு	: 2022
ஆசிரியர்	: சொ.சொ.மீ. சுந்தரம்
உரிமை	: வ.சுப.மா குடும்பத்தார்க்கு
மொழி	: தமிழ்
நூல் அளவு	: 1 x 8 டெம்மி
நூல் கட்டுமானம்	: சாதாரண கட்டு
தாள்	: 70 ஜி.எஸ்.எம். மேப்த்தோ
மொத்த பக்கங்கள்	: 120
விலை	: ரூ. 120/-
அச்சிட்டோர்	: சொ. முருகேசன் சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் சிவகாசி.

முன்னுரை

காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியில் அந்த மாணவன் பல்கலைக்கழக முன்னிலை வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். கல்லூரியில் ஒரு கவிதைப் போட்டி நடந்தது. சுமார் ஐம்பது மாணவர்கள் கலந்து கொண்டார்கள். தமிழ் முதுகலை மாணவர்களும் பங்கேற்றார்கள். மூன்று தலைப்புகள் தரப்பட்டன. மூன்று மணிநேரத்தில் கல்லூரி அறையில் பேராசிரியர் மேற்பார்வையில் கவிதை எழுத வேண்டும். முன்னிலை வகுப்பு மாணவன் மூன்று தலைப்புகளில் "எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்ற தலைப்பில் எண்சீர் விருத்தமாகச் சுமார் இருபது பாடல்கள் எழுதினான். பேராசிரியர் கவிஞர் க. தேசிகனார் இரண்டு கவிதைகளைப் பரிசுக்கு உரியனவாகத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனாரிடம் கொடுத்தார். இருவருக்கும் பரிசு கொடுக்க வேண்டும் என்று தேசிகனார் கூறினார். சிக்கனத்தால் சிறப்புற்ற மாணிக்கனார் "அந்த முதுகலை மாணவனுக்குப் பரிசு கொடுங்கள். முன்னிலை வகுப்பு மாணவனை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்" என்றார். அந்த முன்னிலை வகுப்பு மாணவன் அவரைப் பார்த்தான். "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்ற அப்பர் வாக்கு அவனுக்கு நினைவு வந்தது. அவன் அவருக்கே பிச்சன் ஆனான். அடுத்த மூன்றாண்டுகள் வணிகவியல் படித்தான். அவர் அமைத்த கலைக்கழக உறுப்பினன் ஆனான். நாலடியாரும் திருவாசகமும் முழுமையாகப் படித்துப் பேரிலக்கியப் பரிசு பெற்றான். அவர் அவனுக்குத் திருவாசகப் பாடம் நடத்தினார். அவனைத் திருத்திப் பணிகொண்டார். அந்த மாணவன் இப்பொழுது அந்த ஆசான் வ.சுப. மாணிக்கனார் மேல் பிள்ளைத் தமிழ் பாடி இந்த முன்னுரையை எழுதிக்

கொண்டிருக்கிறான். இது அவன் பெற்ற பேறு, இந்த மாணவன் நான் தான்.

இந்தப் பிள்ளைத் தமிழ் நான் எழுதும் நான்காவது பிள்ளைத் தமிழ். பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் கட்டளைப்படி அவருடைய ஆசான் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் நூற்றாண்டு விழாவையொட்டிப் பண்டிதமணி மீது பிள்ளைத்தமிழ் பாடினேன். இது 1991ல் வெளிவந்தது. இரண்டாவதாகச் சிங்கப்பூர் அருள்மிகு ருத்திர காளியம்மன் மீது பிள்ளைத்தமிழ் பாடினேன். இது 2015ல் சிங்கப்பூரில் வெளியிடப் பெற்றது. மூன்றாவதாகச் சிங்கப்பூர் அருள்மிகு தண்டாயுதபாணி மீது பாடிய பிள்ளைத்தமிழ் சிங்கப்பூரில் 2016ல் வெளியிடப் பெற்றது. இப்பொழுது நான்காவதாக மாணிக்கனார் பிள்ளைத்தமிழ் 2017ல் வெளிவருகிறது. என்னை வளர்த்துத் தமிழ்ச் சான்றோர் அவையில் முன்னிற்க வைத்தவர் என்னுடைய பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள். இந்த நூல் எழுதியதன் மூலம் என் நன்றியைத் தெரிவிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. இதற்காக நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் இறைவனுக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இந்நூலில் சில மாற்றங்களைச் செய்துள்ளேன். ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்களில் சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், சிறு தேர்ப் பருவம் என்பன இறுதியில் அமைவன. இவற்றை நீக்கிவிட்டு வாய்மைப் பருவம், வள்ளுவப் பருவம், வாசகப் பருவம் என்ற மூன்றையும் இணைத்துள்ளேன். மாணிக்கனார் வாய்மையின் மறுவடிவம். வள்ளுவச் செயலாளர். வாசகப் பற்றுடையார். அதற்கேற்றபடி இப்பருவங்களைப் பாடி இருக்கிறேன். வள்ளுவப் பருவப் பாடல்கள் பத்தும் திருக்குறள் தொடர்களில் தொடங்கும். இதுபோல வாசகப் பருவம் பத்துப் பாடல்களும் ஏதேனுமொரு திருவாசகத் தொடரில் தொடங்கும். மாணிக்கனாருடைய வாழ்க்கை வரலாறு, குடும்பம், மனைவி, பிள்ளைகள், ஐயா, அண்ணன், தம்பி, அவர் பணியாற்றிய

இடங்கள், அவருடைய ஆசிரியப் பெருமக்கள், அவருடைய நூற்கள், அவர் செய்த தற்சிந்தனை, அவருடைய உரைகள், கவிதைகள், அவருடைய நண்பர்கள், அவருடைய இறைப்பற்று அவர் கனவில் கண்ட சான்றோர்கள் எனப் பல செய்திகள் இப்பிள்ளைத் தமிழில் பாயாசத்தில் முந்திரிப் பருப்புப் போலக் கிடக்கின்றன.

காப்புப் பருவத்தில், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் உள்ள சாமிநாத விநாயகர், பழனிக்குப் பாதயாத்திரையாகக் கொண்டு செல்லப்படும் வேலாயுத சாமி, மதுரைச் சொக்கங்கப் பெருமான், மீனாட்சி அன்னை ஆகியோர் குழந்தையைக் காக்க வேண்டும் என்று வேண்டப்படுகிறது. நகரத்தார் குலக் கோயில்களில் மாணிக்கனார் வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர் என்பதால் வயிரவர் காக்க வேண்டும் என்றும், மாணிக்கனார் மனக் கோயில் மதித்துப் போற்றிய மணிவாசகர், திருவள்ளுவர், கம்பர், தொல்காப்பியர், தமிழன்னை, காந்தியடிகள் ஆகியோர் குழந்தையைக் காக்க வேண்டும் என்றும், காப்புப் பருவம் தொடர்கிறது. மாணிக்கக் குழந்தை வள்ளுவம் பேச வேண்டும் என்றும், வாய்மையைக் கூறி மனிதரைக் காக்க வேண்டும் என்றும், திருவாசகம் பாடித் திருவருளை அடைய வழிகாட்ட வேண்டுமென்றும் இறுதிப் பருவங்கள் இயம்புகின்றன. இந்நூலில் மாணிக்கனார் வாழ்க்கையில் நடந்த குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகள் ஒருமுறைக்கு மேல் பாடப் பெற்றுள்ளன. இந்தப் பிள்ளைத் தமிழை எழுதிய போது மணிவாசகர் பாடிய

“வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின்
பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே பொங்கு கங்கைசடைச்
செறுப்பவனே நின் திருவருளால் என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.”

என்ற பாடல்தான் நினைவில் நின்றது. மாணிக்கப் பேராசான் பெருமையால் என் பாட்டையும் நன்பாட்டாக அறிஞர் உலகம் ஏற்க வேண்டுகிறேன். ஆசானைப் போற்றி மாணவன் எழுதிய இந்தப் பிள்ளைத் தமிழ்நூல், மாணவன் கையெழுத்திலேயே அச்சிடப்பட்டு வெளி வருகிறது. ஆசான் கையெழுத்து முத்து முத்தாக இருக்கும். மாணவன் கையெழுத்து அப்படி இருக்காது. இப்படி அச்சாகும் என்று மாணவனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அவன் தன்னுடைய கையெழுத்தை இன்னும் கொஞ்சம் திருத்திக் கொண்டிருப்பான். இந்நூலைக் கையெழுத்துக் கவிதையாய் அச்சிட்டு அழகு சேர்த்த சிவகாசி சூர்யா பிரிண்ட்ஸ் சொலூசன்ஸ் உரிமையாளர் திரு. சொ. முருகேசன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செந்தமிழ் நூலுக்கு அணிந்துரை வழங்குவது சிற்பத்திற்குக் கண் திறப்பது போன்றது. இப்பணியைச் செய்திருப்பவர் பண்டிதமணி கதிரேசனாரின் புகழ் வளர்க்கும் திருமைந்தர், முனைவர் தியாகராசன் அவர்கள். இவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிப்புல முதன்மையராகப் பணியாற்றிப் பல்கலைக் கழகத்திற்கு மேலும் பெருமையும் புகழும் சேர்த்தவர்கள். "மகனறிவு தந்தையறிவு" என்ற தொடருக்கு இலக்கணமானவர்கள் திருவாசகத்தில் திருச்சதகத்திற்குப் பண்டிதமணி நயவுரை எழுதப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள். அவருடைய பெயரைப் பெற்ற முனைவர் தியாகராசனார் அவர்கள், இந்தப் பிள்ளைத் தமிழைப் பெருந்தமிழாக நினைத்துப் படிப்பவர்க்கு வழிகாட்டும் வண்ணம் மிகச் சிறப்பாக அணிந்துரை எழுதி அழகு சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் புலமைக்குத் தலைவணங்கி மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் தமிழ்ப் புலமையும் பற்றும் அதிகமாக உடையவர்கள் வயிரவன் கோயில்

நகரத்தார்கள். இந்தப் பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவரும் பாடியவரும் அணிந்துரை தந்தவரும் வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்நூலை மார்த்தாண்ட வயிரவர் திருவடிகளில் வைத்து வணங்குகிறேன். இந்நூல் வெளியீட்டில் எல்லா வகையாலும் சிறப்பாகப் பங்கேற்ற வ.சுப. மாணிக்கனார் குடும்பத்தாருக்கும் குறிப்பாகப் பேராசிரியை மாதரி அவர்களுக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். மாணிக்கனார் நூற்றாண்டையொட்டி வெளிவரும் இக்கவிதை நூலை அவருடைய திருவடிகளில் வைத்து வணங்கி மகிழ்கிறேன். ஆசான் பண்டிதமணிக்கும் பிள்ளைத்தமிழ் பாடி அவருடைய தலைமாணாக்கர் மாணிக்கச் செம்மலுக்கும் பிள்ளைத் தமிழ் பாடும் பேறு பெற்றமைக்காக அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயழகனை வாழ்த்தி வணங்குகிறேன்.

மதுரை
14.8.2017

பணிவுள்ள
சொ.சொ.மீ. சுந்தரம்

பேராசிரியர் முனைவர் கதி. தியாகராசன்
முன்னாள் தமிழியல் துறைத் தலைவர்
இந்திய மொழிப் புல முதன்மையர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
இன்று : கோயம்புத்தூர்

அணிந்துரை

ஒருவர் பண்டிதமணி. இன்னொருவர் செம்மல். பண்டிதமணி அண்ணாமலையில் பணியாற்றியவர் செம்மல் அண்ணாமலையில் கல்வி பயின்று அங்கேயே தமிழாசிரியராகப் பணி மேற்கொண்டவர். பண்டிதமணியைக் குருவாக மட்டுமல்லாமல், தன் வழிபடு தெய்வமாகவும் போற்றக் கூடியவர். பண்டிதமணியும் செம்மலைத் தன் தலை மாணாக்கராகப் போற்றியவர்கள். இருவருக்கும் உள்ள தொடர்பு அளவிடற்கரியது.

செம்மல் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் அழகப்பா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய பொழுது, 1970 ஆலைத் திங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தலைவராகவும் நியமனம் பெற்றவர்கள். பண்டிதமணியை, அண்ணாமலை அரசர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அழைத்துப் பெருமை சேர்த்தார்கள். அதுபோலவே செம்மல் வ.சுப.மாணிக்கனார் அவர்களை அரசர் முத்தையவேள் அவர்கள் அழைத்துப் புகழ் கூட்டினார்கள். 1970க்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை மூன்று துறைகளாகச் செயல்பட்டது.

1. தமிழ்த்துறை (கலைப்புலம்)
2. தமிழ்த்துறை (கீழைக் கலைத்துறைப் புலம்)
3. தமிழ் ஆராய்ச்சித்துறை.

வ.சுப.மா. அவர்கள் 1970ல் இப்பணியை மேற்கொள்வ தானால், ஒரு நிபந்தனையை வேண்டினார்கள். அவர்தம் வேண்டு கோளை ஏற்று, மூன்று துறைகளையும் ஒரு துறையாக ஆக்கி, அதற்குத் 'தமிழியல் துறை' எனப் பெயரிட்டு 'இந்திய மொழிப் புலம்' (Faculty of Indian Languages) என்ற புலத்தில் தமிழியல் துறையினைச் சேர்த்தார்கள். 1. தமிழியல் துறை

2. வடமொழித் துறை 3. இந்தி மற்றும் உருது மொழித்துறை என மூன்று துறைக்கும் உள்ளடக்கியதாக இந்திய மொழிப் புலம் உருவாக்கப் பெற்றது.

1970 சூலை முதல் 1977 சூன் திங்கள் வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 7 ஆண்டுகள் பணி மேற்கொண்டார்கள். தொடக்க காலத்துத் தமிழ்த்துறை போல, தமிழியல் துறை மீண்டும் எழுச்சி பெற்றது. பின்னர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமனம் பெற்று, கல்வியில் சிறந்து விளங்கியது போல நிர்வாகத்திலும் மிகச் சிறந்த இடத்தினைப் பெற்றார்கள். அவர்தம் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைப்பதானால் மிக நீண்டதாக அமையும்.

வ.சுப.மா. அவர்கள் எழுதிய கட்டுரைகளும் நூல்களும் மிகப் பலவாகும். அவற்றை நாடு நன்கு அறியும். எனவே, அவற்றைப் பற்றிய தொகுப்புக்களை விளக்கி உரைக்காமல் அவர்தம் ஆராய்ச்சித் திறன்களை ஒருசில விளக்கங்களால் அறியலாம். வ.சுப.மா.வின் படைப்புக்களில் மூன்று நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. தமிழ்க் காதல் 2. வள்ளுவம் 3. கம்பர். நான் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பொழுது கம்பர் சொற்பொழிவினை நேரிலேயே கேட்டு சிறப்புற்றவன். இந்த மூன்று நூல்களும் அவர்தம் நுண்ணிய ஆராய்ச்சிப் புலமையினை நன்கு வெளிப்படுத்துவன. ஆழமான புலமையினையும் கருத்துச் செறிவினையும் அவர்தம் படைப்புக்களில் நாம் அறியலாம்.

இத்தகைய பெருமைக்குரிய மாணிக்கனார் மீது 'மாணிக்கனார் பிள்ளைத் தமிழ்' என்னும் பெயரில் பொற்கிழிக் கவிஞர் திரு. சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் ஒரு நூலை ஆக்கியுள்ளார்கள். திரு. சொ.சொ.மீ அவர்கள் நாடறிந்த ஒரு நல்லறிஞர். அவரைப் பற்றி விரித்துரைத்தால், அது ஒரு நீண்ட நூலாகவே அமையும். வணிகவியல் படித்து வணிகவியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றிப் பெருமை சேர்த்தவர்கள். தமிழ் ஞானம் என்பது அவர்களுக்குக் கிடைத்த ஒரு வரமாகவே கருகின்றேன். ஆழ்ந்த புலமை. தெளிவான சிந்தனை. எளிதாக விளக்குவதில் வல்லவர். ஆன்மீகச் சொற்பொழிவாளர்.

திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு. தம் இல்லத்திற்குத் 'திருவாசகம்' எனப் பெயர் சூட்டியவர். அனைத்துக்கும் மேலாக, அவர் தம் ஆசான் மாணிக்கனார் மீது கொண்டுள்ள பக்தி.

திரு.சொ.சொ.மீ. அவர்களை நாடு நன்கறியும். எனவே, அவர்தம் படைப்புகளையும் அவர் தமிழ் உலகுக்குச் செய்து வரும் பெரும் பணிகளையும் எடுத்துரைத்தால் அது ஒரு நீண்ட கட்டுரையாக அமையும். எனவே, அவற்றை விரித்துரைக்காமல், மாணிக்கனார் பிள்ளைத் தமிழில் இருந்து, அவர்தம் கவிதை ஆற்றலை எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களில் சிற்றில் பருவம். சிறுபறைப் பருவம். சிறு தேர்ப்பருவம் என இறுதியில் வரும் மூன்று பருவங்களையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக வாய்மைப் பருவம், வள்ளுவப் பருவம், வாசகப் பருவம் எனப் பெயரிட்டு மூன்று பருவங்களையும் பாடியுள்ளார்கள். மாணிக்கனாருக்கு வாய்மை, வள்ளுவம், வாசகம் எனப் பெயரிட்டுப் பாடியது போற்றுதற்குரியது.

அவையடக்கத்தில், "மாணிக்கப் புகழ் கவி அளக்குமா?" எனச் சுட்டுவது. அவர்தம் குருபக்தியைக் காட்டுவதாகும்.

காப்புப் பருவத்தில் சாமிநாத விநாயகர், வேலாயுத சாமி, சொக்கங்கப் பெருமான், அங்கயற்கண்ணி, வயிரவக் கடவுள், மணிவாசகர், திருவள்ளுவர், தொல்காப்பியர், காந்தியடிகள், தமிழன்னை என அவர் சிறப்பித்துப் பாடியிருப்பது, மாணிக்கனாருக்கு உள்ள ஈடுபாடுகளைப் புலப்படுத்துவதாக உள்ளது. "உலகன்னை இதுவரை பெற்ற மக்களில் மிக உயர்ந்தவர் காந்தி" என்று உரைப்பது காந்தியடிகளிடத்து வ.சுப.மா. கொண்டுள்ள பெருமதிப்பினை எடுத்துக் காட்டுவதாகும். "உள்ளத்திலே வாய்மை, உரையெலாம் செந்தமிழ், உணர்விலே காந்தி அண்ணல்" – இவை வ.சுப.மா. வாழ்க்கை நெறிகளைப் புலப்படுத்தும் வரிகள்.

செங்கீரைப் பருவத்தில் வரும், "புதிய சொல் ஆக்கினாய் பழமரபு போற்றினாய்" என்ற வரிகள் அவர்தம் புதிய சொல்லாக்கங்களை எடுத்து இயம்புகின்றது. தம் ஆசான் பண்டிதமணி பற்றி, "பற்றற்ற ஈசனைப் பற்று பண்டிதமணி பரமனாய்க் காட்சி தந்தார்" எனக் குறிப்பிடுகின்றார். அவர் தம் தனித்தமிழ் இயக்க நெறியினை, "தாயான தமிழ்மொழி கல்வி

மொழியாக நீ தனிப்போர் தொடுத்து நின்றாய்" எனக் குறிப்பிடுகின்றார்.

தாலப்பருவத்தில், "ஊர்ப் பொது நலனுக்கு ஆறில் ஒரு பங்கு ஒதுக்கி வைத்தவனே" - இது "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதனைக் குறிப்பிடுவதாகும். வ.சுப.மா.வின் உழைப்பின் சிறப்பினை, "இமயம் வணங்க உழைப்பால் உயர்ந்த இசையே" எனத் தாலாட்டுகிறார்.

சப்பாணிப் பருவத்தில், வள்ளல் அழகப்பரின் கொடைத் தன்மைகளை, "மனையையும் கொடை தந்து பாரியை வென்றவன் வள்ளலாய் அழகன் ஆனான்" எனக் குறிப்பிடுகின்றார். "மாணிக்கத் தமிழ் என்று உலகேத்த வள்ளுவம் தந்தவனே" என்று மாணிக்கத் தமிழைப் போற்றுகின்றார்.

முத்தப் பருவத்தில், "நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கு அளிக்காமல் நமக்கது கொடுப்பதைப் போல்" என்று பிறர்க்கு உழைப்பதைப் போற்றுகின்றார். "கற்றவர் தொழும் காமராசரின் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராய் கல்வியொடு செல்வமும் சேர்த்து வைத்தாய். அதைக் காப்பாற்றி வாழவைத்தாய்" என்று துணைவேந்தர் பதவிக்குப் பெருமை சேர்த்ததை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

வருகைப்பருவத்தில், "அன்னைத் தமிழை அம்பலம் ஏற்றும் ஆற்றல் பெற்றவனே" - இது தில்லை நடராசர் கோயில், தேவாரம் திருவாசகம் பாட அறப்போர் நடத்தியது குறித்து பண்டிதமணியை "பண்டிதமணியின் வழிவழி அடிமை" என்று போற்றுகின்றார்.

அம்புலிப்பருவத்தில் பிள்ளைத் தமிழுக்குப் புலி அம்பு என்பார்கள். இந்தப் பருவத்தில் அமைந்துள்ள பாடல்கள் அனைத்தும் திரு.சொ.சொ.மீ அவர்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. "உலகிலே வெளியிருளை நீ போக்குவாய். இவன் உள்ளத்து இருள் நீக்குவான்" என்று அம்புலியுடன் உவமைப்படுத்துவது பாராட்டத்தக்கது. "ஊரெல்லாம் நீ சுற்றி இளைக்கிறாய் இப்பிள்ளை ஒருகாலும் இளைக்காதவன்" என்பது வ.சுப.மாவின் உழைப்பின் சிறப்பினை எடுத்தியம்புவதாகும்.

வாய்மைப் பருவம், வள்ளுவப் பருவம் மற்றும் வாசகப் பருவம் ஆகிய இறுதி மூன்று பருவங்களும் திரு.சொ.சொ.மீ அவர்களின் கருத்து ஆழம், கவிதை நடை, தெளிவான சிந்தனை, தக்க சொற்கோர்வை, ஆசிரியர் பால் கொண்டுள்ள பக்தி என விரிந்து செல்கின்றது. "மனமே கோயில் என வாழ்ந்த" மாணிக்கனார் வாழ்வினை இதனைவிடச் சிறப்பாக எடுத்துரைக்க இயலாது.

பேராசிரியர். திரு.சொ.சொ.மீ.அவர்கள் இதுவரையில் மூன்று பிள்ளைத்தமிழ் நூல்களை ஆக்கி, இது நான்காவது பிள்ளைத் தமிழாக வெளிவருகின்றது. வ.சுப.மா. அவர்களின் ஆசான் பண்டிதமணிக்கும் பிள்ளைத்தமிழ் பாடி, மாணாக்கர் வ.சுப.மா அவர்களுக்கும் பிள்ளைத் தமிழ் பாடும் வாய்ப்புக் கிடைத்தது இறையருள் என்றே கூறவேண்டும். பல பட்டங்கள் பெற்றிருந்தாலும் அவர் ஒரு அருட்கவிஞர், ஆன்மீகக் கவிஞர், உள்ளத்தால் உயர்ந்த கவிஞர் என்பதனை மாணிக்கனார் பிள்ளைத் தமிழ் என்னும் இந்நூல் விளக்குகிறது.

வ.சுப.மா. அவர்களை நன்கு அறிந்தவன் நான். 7 ஆண்டுகள் அவர்களிடத்துப் பணியாற்றும் பேறு பெற்றவன். என்னைத் தன் மகனாகக் கருதி என்பால் அன்பின் மிகுதியினை வெளிக்காட்டியவர்கள். என் உறவினர் இல்லத்திருந்து, அவர்கள் அண்ணாமலை நகரில் தங்கியிருந்த 7 ஆண்டுகளும் அவர்களுக்கு வேண்டிய உணவினை ஆக்கித் தரும் பேறு பெற்றவன் நான்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மாணிக்கனார்க்கும் அவர்மீது பிள்ளைத்தமிழ் பாடிப் பெருமைப்படுத்திய திரு.சொ.சொ.மீ அவர்களுக்கும் என் மகிழ்ச்சியினையும், இந்நூலுக்கு அணிந்துரை அளிக்கும் வாய்ப்பு அளித்த மாணிக்கனாரின் குடும்பத்திற்கு என் நன்றியினையும் புலப்படுத்தி இவ்வணிந்துரையினை நிறைவு செய்கின்றேன் நன்றி.

அன்புடன்

கதி. தியாகராசன்

இறைவணக்கம்

மாணிக்கச் செம்மல் வளரும்பின் தைத்தமிழைக்
காணிக்கை ஆக்கிக் கழல்பணிந்தேன் – அணிப்பொன்
எண்ணக் கவிதை எனக்களிப்பாய் சிற்சிலம்பை
மன்னா சிதம்பரத்தே வா.

தேவைச் சிலம்பணியில் சீரார் சிதம்பர! என்
பாவை உனக்காக்கிப் பாடுகிறேன் – நாவினிக்கப்
பிள்ளைத் தமிழைப் பெருந்தமிழாய் ஆக்கிடுவாய்
வள்ளால் உன் கையினில் என் வாழ்வு.

அவையடக்கம்

மலையைச் சுண்டெலி அசைக்க முடியுமா?
வானைக் கைகளால் மறைக்க முடியுமா?
அலைகடல்தனை மீன் குடிக்குமோ?
ஆற்று நீரெலாம் கிணறு கொள்ளுமோ?
வலையில் யானையை மாட்ட முடியுமா!
மாணிக்கப் புகழ் கவி ஆக்குமோ!
தலைவணங்கியே நான் ஆக்கினேன்
தமிழ் எனும் பெயர் துணை இருக்குமே.

தமிழ் வணக்கம்

ஆசானுக்குப் பிள்ளைத் தமிழை
அடியேன் பாடியவன்
அதுபோல் இன்று மாணவனுக்கும்
அதையே பாடுகிறேன்
பேசாப் பெருமைப் பெரியோர் எந்தன்
பிள்ளைகள் ஆனார்கள்
பேசத் தெரியேன் பாடத் தவித்துப்
பிதற்றி நிற்கின்றேன்
ஆசை பற்றி அறையும் பாடல்
அதை நீ கேட்பாயோ
அன்னைத் தமிழே! சின்னப் பிள்ளைக்கு
அறிவைத் தருவாயோ
காசும் பணமும் தாராய் அம்மா
கருணை புரிவாயோ
காலம் கடந்து நிற்கும் தமிழே
கவியில் வருவாயோ?



1.காப்புப் பருவம்

1. காப்புப் பருவம்

சாமிநாத விநாயகர்

மண்ணுதமிழ்ச் சான்றோர்கள் ஆண்டுக் கொடுமுறை
வந்துசொற் பொழிவுசெய்ய
வளமான நகரத்தார் அவர்களுக் கேற்றபடி
மனமாரத் துதிசெய்யத்
தண்ணிகரில் லாமேலைச் சிவபுரியில் மாமதுரைச்
சங்கம் போல் ஓங்கிநிற்கும்
சன்மார்க்க சபையினில் சாமிநா தப்பெயர்த்
தனியானை பதம் போற்றினேன்
என்னுடைய பேராசான் கன்னித் தமிழ்ப்புலவன்
இறையருள் பெற்ற பக்தன்
எளிமையும் தூய்மையும் வாய்மையும் நேர்மையும்
எடுத்தநல் வடிவமானோன்
முன்னவர் பின்னவர் யாவரும் போற்றிடும்
முதறிஞன் ஆளசெம்மல்
முத்தமிழ் நெஞ்சினில் வைத்தவன் மாணிக்க
முதல்வனைக் காக்கவென்றே.

வேலாயுதசாமி

மேலைச் சிவபுரியில் சுப்பையா கோயிலில்
வேலாக நின்றிருப்பவன்
விளங்கிடும் சங்கநூல் முருகாற்றுப் படையினில்
வெற்றிவடி வேல் ஏந்தினோன்
சீலமுறும் புகழ் பகழிக் கூத்தனார் தமிழ் கேட்கச்
செந்தூரில் இடுகொண்டவன்
சேவலங் கொடியனைக் குறுந்தொகை வாழ்த்திடும்
தெய்வத்தைப் போற்றுகின்றேன்.
காலம் கடந்தவன் தமிழன்னை விரலுக்குக்
கவிமோதிரமளித்தோன்
காசிலா வாசகம் கம்பனார் காப்பியம்
கைமணக்கப் படைத்தோன்
கூலவாணிகன் சாத்தன் இளங்கோவின் காப்பியம்
கொலுவிருக்கின்ற நெஞ்சன்
சிவலயம் தொடு மேலைச் சிவபுரியில் மாணிக்கக்
குழந்தையைக் காக்கவென்றே.

சொக்கலிங்கப் பெருமான்

அணிபெறும் சங்கநூல் புலவனாய்த் தருமிக்கு
அன்று பொற்கிழி தந்தவன்
அப்பனாய்த் திருமுறை ஆசிரியன் ஆகவே
அருள்திரு முகம் எழுதினோன்
தணியாத காதலால் திருவாசகத்தினைத்
தானே எழுதி வைத்தோன்
தமிழ்மதுரை ஆண்டவன் தரும துரையானவன்
தமிழ்ப்பதம் போற்றுகின்றேன்.
கணியன்பூங் குன்றனார் கால்பட்ட மண்ணிலும்
கவியிலும் கல்வி கற்றோன்
காதலால் சங்கநூற் கவிகளில் வளர்தமிழ்க்
காதலை ஆய்வு செய்தோன்.
மணிவாசகத்தினைத் தோளிலும் நெஞ்சிலும்
வளமாய்ச் சுமந்த செம்மல்
மன்னுசீர்ச் சிவபுரிச் சுப்பையா தெய்வானை
மைந்தனைக் காக்கவென்றே.

அங்கயற்கண்ணி

- கன்னி நாடாண்டவள் தென்னவர் கோமகள்
 கனவிலே வந்த தேவி
 காழியில் பால்தந்து வாழ்தமிழ் நூல்பெற்றுக்
 கயிலையில் கொடிபொறித்து
 மன்னவன் மடிவளர் குழந்தையாய்க் குருபரர்
 பாக்கிற்கு மாலையிட்டு
 வளர் அங்கயற்கண்ணி மாணிக்க மீனாட்சி
 மலர்ப்பதம் வாழ்த்துகின்றேன்
 அன்னையின் மூக்கினில் மாணிக்க மூக்குத்தி
 அப்பெயர் பெற்று வந்தே
 அருந்தமிழ் பரப்பவும் வாய்மையைக் காக்கவும்
 அவனியில் பிறந்ததைப் போல்
 தன்மனத் தாய்மையன் மாணிக்க மாய்வந்து
 தமிழ்மண் அமர்ந்த தெய்வம்
 தமிழ் வாழ்க என்னாமல் தமிழ்வாழத் தான்வாழ்ந்த
 தமிழனைக் காக்க வென்றே.

வயிரவக் கடவுள்

அழல்நிறம் பெற்றவன் கரியுரி போர்த்தவன்
அன்பருக் கெளிய தெய்வம்
அதிர்ச்சியாய் வருபவன் சூலமும் உடுக்கையும்
அருட்கரத் தேந்தி நிற்போன்
வழிவழி அடிமையாய் எங்களை ஆள்பவன்
வயிரவன் கோயிலுக்குள்
வந்தவர் அனைவர்க்கும் செந்தமிழ் தந்திடும்
வடுகனைப் போற்றுகின்றேன்.
நிழற்படம் எடுக்கப் பிரியப் படாதவன்
நினைவிலும் தூய செம்மல்
நெஞ்சிலும் தோளிலும் தமிழ்தாங்கி வாழ்ந்தவன்
நெடுந்தமிழ்க் காய்நடந்தோன்
தழற்புரை சுடர்க்கடவுள் திருமுனை தில்லையில்
தானேறத் தவமிருந்தோன்
தக்கவர் போற்றுபுகழ் மிக்கமா ணிக்கமாம்
தலைவனைக் காக்கவென் றே.

மணிவாசகர்

வந்தியின் பிட்டுக்கு மண்சுமந் தடிபட்ட
வள்ளலைப் பாடவைத்த
வாசகம் கேட்டவர் நெஞ்சுருகப் பொய்மையற
மனமெலாம் தமிழ்மணக்கச்
செந்தமிழ்ச் சொற்களைத் திரையில் வரச்செய்து
திருவுருக் கண்டுநின்று
திருப்பெருந் துறைவனர் மாணிக்க வாசகத்
சிவனடிகள் போற்றுகின்றேன்
சொந்தவூர் சிவபுரி சிவபுரம் ஆகவே
சொல்லரிய திருவாசகம்
தாய்மைசேர் உயிர்நூல் உணர்வுநூல் எனக்கொண்டு
தோத்திரம் செய்த செம்மல்
அந்திபகல் எப்பொழுதும் வாசகம் இறைஞ்சும்
அவை இரு கண்களாக
ஆறுக்கடவுள் அடிபோற்ற மறக்காத மாணிக்க
அறிஞரைக் காக்கவென்றே.

திருவள்ளுவர்

வள்ளலாம் ராமகதைச் சித்திரம் பலதீட்ட
வளர்திரைச் சேலைதந்தோன்,
வையத்தில் இவன்போலா எப்போதும் இல்லையென
மாநிலம் போற்ற நின்றோன்,
தென்தமிழ் வழியிலே முப்பால் கொடுத்ததாய்,
சிறுகுறள் ஆய் வளர்ந்தோன்
தெய்வப் பெரும்புலவன் திருவள்ளுவச் செம்மல்
சேவடிகள் அர்ச்சிப்பாம்

வள்ளுவச் சொற்பொழிவு பன்னிரண் டாக்கியே
மாதமொடு முறை வளர்த்து
மறவாது கற்பனைப் பொழிவினால் நல்லறம்
மனங்களில் சேரவைத்தோன்.
உள்ளத்தால் பொய்யா தொழுகியே ஆன்றோர்கள்
உள்ளத்தி லே இருக்கும்
உத்தமன் சத்தியன் மாணிக்கம் சிவபுரி
ஊரணைக் காக்கவென்றே

தொல்காப்பியர்

பிட்டுண்ட சிவனுக்குப் பேசுதிரு வாசகம்
பேரறிவு திருவள்ளுவம்
பெருந்தமிழ் வாழ்வுநூல் தொல்காப்பியம் என்று
பேசநூல் செய்துவைத்தோன்.
சட்டமாய் இலக்கணம் தான்தரும் இலக்கியன்
தமிழ்முதல் நூல் அளித்தோன்
தக்கதொல் காப்பியன் திருவடித் தாமரை
தமிழினால் போற்றுகின்றேன்.
எட்டாவ தாண்டினில் அன்னையும் அத்தனும்
இறைவனை சென்றுசேர
ஈன்றவள் தந்தையாம் அண்ணாமலைச் செல்வர்
இருபத்தைந் தாண்டுகாலம்
திட்டமாய் வளர்த்ததால் செந்தமிழ் அறிஞனாய்த்
திசையெலாம் போற்றவாழ்ந்து
திருந்துதொல் காப்பியப் புதுமைதரு மாணிக்கச்
செம்மலைக் காக்கவென்றே.

காந்திய புகழ்

மலை போல் உயர்ந்தாலும் நிலையில் திரியாத
வாய்மையே வாழ்க்கையாக
வல்லரசு பணியவும் நல்லரசு தோன்றவும்
மனத்தினால் வென்ற சான்றோன்
பலகலை கற்றாலும் திருக்குறள் கீதையின்
பாதையில் நின்ற தேவன்
பற்றுதரு வாசகம் கேட்டுயர் காந்தியாம்
பரமனைப் பாடுகின்றேன்.

உலகின்னை இதுவரை பெற்ற மக்களில் மிக
உயர்ந்தவர் காந்தி என்று
ஒவ்வொரு செயலிலும் மறவாமல் வாய்மையை
உள்ளத்தில் ஏற்று நின்று
பலகாலம் காந்தியார் மறைந்த மாலைப் பொழுதில்
பணிவுடன் தவமிருந்த
பண்புமிகு மாணிக்கச் செம்மலாம் காந்தியின்
பக்தனைக் காக்கவென்றே.

தமிழன்னை

வள்ளுவச் செங்கோல் கம்பமுடி தாங்கியே
வளமுறும் தாலியாக
மாணிக்க வாசகர் திருவா சகம் பெற்று
வளையா பதியணிந்து
வெள்ளமாய்க் கவிபாடும் பாரதியின் அரியணையில்
வீற்றிருந் தருளுகின்ற
மேலான தமிழன்னை திருவடி என்தலை
மீதுவைத் திறைஞ்சுகின்றேன்.
உள்ளத்தி லேவாய்மை உரையெலாம் செந்தமிழ்
உணர்விலே காந்தியண்ணல்
ஓதுவது வாசகம் உரைப்பொழிவு வள்ளுவம்
உண்மையே தெய்வமாகத்
தென்றமிழ் ஆங்கிலப் புலமையொடு நாடெலாம்
செந்தமிழ் வாழவைத்துச்
செல்வத்துட் செல்வமே தருகின்ற மாணிக்கச்
செல்வனைக் காக்கவென்றே.


வ. சுப. மாணிக்கனார்
நூற்றாண்டு விழா
2016 - 2017
என் குறிக்கோள்...
தமிழுக்குத் தொல்காப்பியமும்,
வாழ்வின் உயர்வுக்குத் திருக்குறளும்,
உயிர்த் தூய்மைக்குத் திருவாசகமும்,
எனக்கு வழிகாட்டிய தமிழ் மறைகள்.
எளிய வாழ்வு அளவான பேச்சு,
எந்நிலையிலும் எதிர்கால நம்பிக்கை,
பதவிகளைத் தொண்டாக மதித்தல்,
சோர்வுக்கு இடங் கொடாத ஊக்கங்கள்.
நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணமுழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.


வ. சுப. மாணிக்கனார்
(17.04.1917 - 24.04.1989)
நூற்றாண்டு
திருவுருவச்சிலை
குன்றக்குடி பொன்னம்பல
கருமுத்து தி. கண்ணன்
02.09.2017



2.செங்கீரைப் பருவம்

௨. செங்கீரைப் பருவம்

பிறப்பறி யாத தமிழ் பெற்றநல் மைந்தனாய்ப்
பிறந்துநீ இங்கு வந்தாய்
பெருந்தமிழ் இலக்கியக் கல்வியே நிலையென்று
பேணியே நீ வளர்த்தாய்
அறப்பணிச் செம்மலாய்த் தமிழ்ப்பெருங் கல்லூரி
அதனையும் நீ வளர்த்தாய்
அருந்தமிழ்ப் பட்டங்கள் பலகொடுத் தாய்தமிழ்
அறிவினால் இமயமானாய்
புறப்பொருள் கண்டனை அகப்பொருள் ஆய்ந்தனை
புகழ்க்கொடி நாட்டி நின்றாய்
புதியவை ஆக்கினாய் பழமையும் போற்றினாய்
புரிந்தநல் மாட்சி ஓங்கச்
சிறப்புறும் அழகப்பர் கல்லூரி முதல்வனே
செங்கீரை ஆடியருளே
செந்தமிழ்ச் சைவபுரியில் வந்தவொரு மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

பாரதிப் பழமையும் காப்பியப் புதுமையும்
பார்த்துநீ எமக்கிணைத்தாய்
பழந்தமிழ் ஆலெலாம் மனித்துநோக்கித் தனிப்
பார்வையால் ஆய்வுசெய்தாய்
வாராது போல்வந்த வள்ளுவன் வாக்கிலே
மனத்தைப் பறிகொடுத்தாய்
வள்ளுவம் கற்றவன் வாழாதிரான்என்று
வாழ்ந்துநீ காட்டிவிட்டாய்
ஓர்ந்த தமிழ்மகன் வ.உ.சி வரலாற்றை
எழுதவே நீநினைத்தாய்
ஏற்றபெயர் வைத்துநீ இந்தியச் செக்கினை
இழுக்காமல் மறையலாமோ?
சீருடன் சொல்லிலும் சிக்கனம் செய்தவன்
செங்கீரை ஆடியருளே
செந்தமிழ்ச் செவ்வரியில் வந்தவொரு மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

மற்றவரை மதியாது தன்னையே மதிப்பது
வாழ்க்கையில் புன்மை நோக்கம்
மற்றவரை மதித்தென்றும் தன்னைமதி யாமையது
வாழாத நோக்கமாகும்.
மற்றவரை மதிப்பதுடன் தன்னையும் மதிப்பது
வளர்கின்ற அறிவு நோக்கம்.
வளமாக நீசொன்ன மணிமொழித் தொடர்தனை
வள்ளுவம் காட்டி நிற்கும்.
கற்றவர் போற்றவுயர் சொல்விருந் தளித்துந்
கருத்தினை விளக்கி நிற்பாய்
கைநாடி பார்க்கின்ற மருத்துவன் போலவே
கருத்தமை நாடி பார்ப்பாய்
சிற்றறிவு மாற்றியே முற்றறிவு தந்தவன்
செங்கீரை ஆடியருளே
செந்தமிழ்த் தவமாகி வந்தருள் மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

ஐந்துபிள் ளைகளை ஐந்துமே யாக்கிய
ஐயாவின் பேரன் ஆனாய்
அண்ணனாம் திருப்பதி தம்பியாக் கலிங்கமும்
அகமகிழ நீவளர்ந்தாய்
சேந்தனால் காப்பியன் பூங்குன்றன் பாரிஎன
மூவேந்தர் பிள்ளையாக
முத்தேவி தென்றலாம் மாதர் பெற்றெடுப்ப
மூவரைப் பெற்றெடுத்தாய்
வந்துமோன் பேசிடும் சாரங்க பாணியை
வழித்துணை யாக வைத்தாய்
வளமான மெய்யப்பன் கையிலே நாலெலாம்
வாழவே சேர்த்தளித்தாய்
சிந்தனை சொல் வாழ்வு மூன்றும் ஒன்றானவன்
செங்கீரை ஆடியருளே
சிறுபிள்ளை வடிவினன் மழலையும் மாணிக்க!
செங்கீரை ஆடியருளே.

நற்றமிழ்ச் செல்வனாம் நீபெற்ற கல்வியை
நடேசனார் தொடங்கிவைத்தார்.
நாட்டார் தொடர்ந்தார் ராகவன் சிதம்பரம்
ராமநாதர் வளர்த்தார்
கற்றவர் போற்றிடும் அருணா சலம்பிள்ளை
கல்விசேர் பூவராகன்
கவின்வரத ராசனுடன் மயிலை ஞானப்பன்
கட்டியது கோயிலாகப்
பற்றற்ற ஈசனைப் பற்றுபண் புதமணி
பரமனாய்க் காட்சிதந்தார்.
பண்டித ஜான்சனின் பாசுவல் நீ அவனைப்
பாடுவேன் என்றுசொன்னாய்
சிற்றறிவு மாற்றுபுகழ் பெற்றஆ சான் மகிழச்
செங்கீரை ஆடியருளே
செந்தியம் பதிவேலன் தந்தஇல மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

வையகம் வாழவே செந்தமிழ்க் காதலின்
மாண்பினை ஆய்ந்துரைத்தாய்
மாணிக்கக் குறள்தந்து தொல்காப்பியப் புதுமை
வளமாய் எடுத்துரைத்தாய்.
பையெலாம் புத்தகம் கையெலாம் ஏடுகள்
பதிப்பித்துக் கொண்டிருந்த
பண்பினர் சாமிநாதையருக் குன்நூலைப்
படையலாய் ஆக்கிநின்றாய்
பொய்யாத மாணிக்கப் புலவனாய் வாழ்ந்தநீ
பொழுதெலாம் தமிழ் வளர்த்தாய்
பொன்மணிச் செம்மலும் உன்புகழ் போற்றவே
புகழ்க்கொடி நாட்டிவிட்டாய்
தெய்வத் தமிழ்ப்புலவன் செய்தரு மாணவன்
செங்கீரை ஆடியருளே
செந்திலம் பதிவேலன் தந்தருள மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் புகழெலாம்
விளக்கினார் சாமிநாதர்
விளங்குபண் டிதமணி புலமையைப் பேசிநீ
விளக்கைச் சுடர்வித்தாய்
வாணாட்சி பெற்றுயர் கதிரேசன் நூற்றாண்டு
வளமாய் நடத்திவைத்தாய்
மற்றவர் பேர்நிற்கப் பலநூல் பதிப்பித்து
மாணவப் பணிபுரிந்தாய்
காணாட்சி செய்த இடம் கல்லூரி ஆக்கியவன்
கவிமகுடம் சூடவைத்தாய்
காரைக் குடிஉயரப் பேரைக் கொடுத்துநீ
கதிரகம் ஒளிரவைத்தாய்
தேனாட்சி செய்மதுரை மேனாள் துணைவேந்த
செங்கீரை ஆடியருளே
செந்திலம் பதிவேலன் தந்தருள் மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

வாக்கினைஉன் மணிவார்த்தைக் காக்கியென முன்சொன்ன
மாணிக்க வாசகர் போல்
வையகம் போற்றவுன் மணிவார்த்தை அத்தனையும்
மக்களுக் காக்கிவிட்டாய்
நோக்கரிய நோக்குடன் தமிழாய்வு செய்வதை
நோன்பெனக் கொண்டு வாழ்ந்தாய்
ஆறாயிரம் என்ன நூல்கற்ற செம்மையால்
நுண்ணுணர்வு பெற்றுநின்றாய்
காக்கின்ற தமிழன்னை வாழவே புதுச்சொற்கள்
கனிவுடன் நீகொடுத்தாய்
காரையில் வாழ்ந்தநீ கம்பனார் சொற்கோயில்
கட்டிவைத் தின்ப முற்றாய்
தேக்கியே தமிழுக்கும் அணைகட்டும் செல்வனே
செங்கீரை ஆடியருளே
செந்திலம் பதிவேலன் தந்தருளு மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

தாயான தமிழ்மொழி கல்விமொழி யாகத்
தனிப்போர் தொடுத்துநின்றாய்
சப்பானில் தாய்மொழி கல்விமொழி என்பதால்
தலையெடுத் துயர்ந்ததென்றாய்
சேயான பாரதி திருவிக மறைமலை
தேசமெலாம் பெற்ற தாகூர்
செம்மைசேர் காந்தியுடன் பாரதி தாசனும்
செப்பியதை நீ உரைத்தாய்
தாயதமிழ் கல்விமொழி நடைமுறைப் படுத்தாதார்
கொல்கொடியர் என்றுரைத்தாய்
தொடர்ந்து/தேர் இழுத்தனை இயக்கமாய் மாற்றினை
சொற்றமிழ் காத்திருந்தாய்
தீயவை கனவிலும் நினையாத செல்வனே
செங்கீரை ஆடியருளே
செந்திலம் பதிவேலன் தந்தஇல மாணிக்கம்
செங்கீரை ஆடியருளே.

இங்கிருந்து வாழ்கின்ற நாளெல்லாம் தமிழ் வாழ
ஒன்றனைச் செய்ய வேண்டும்
ஏடாக வாழாமல் மகனாக நீ வாழ்ந்தால்
இனித் தமிழ் உயருமென்றாய்
அங்கதனால் பாடல்கள் சிலவற்றை வெறுமந்தி
தவறாமல் படிக்க வேண்டும்
சந்திகள் பிரிக்காமல் சேர்த்துப் படித்திடில்
தந்தவன் மனம் விளங்கும்
பொங்கியே எழுந்திடு போப்பையர் தனைநினை
பொன்னான தமிழ்மணக்கப்
போராட்டம் இல்லையெனில் தேரோட்டம் இல்லையென்று
பொறுப்புடன் எழுப்பிவிட்டாய்
செங்கமலம் மலரவரு தங்கத் தமிழ்க்கதிர்
செங்கதிரை அருயமே
சந்திலம் பதி வேலன் தந்ததே மாணிக்கம்
செங்கதிரை அருயமே.



3.தாலப் பருவம்

3. தாலப் பருவம்

கொடுக்கப் பிறந்த நகரத் தாரின்
இலமாணிக்கம்நீ
கோடி கொடுத்த கொடையன் பெற்ற
கொடைமாணிக்கம்நீ
தடுக்கிப் போட்டே தாங்கும் இன்பத்
தமிழ்மாணிக்கம்நீ
ஆலத் தமிழ்தரு மேலைச் சிவபுரித்
தலமாணிக்கம்நீ
எடுப்பாய்த் தமிழை எடுத்த் தோன்றிய
எழில்மாணிக்கம்நீ
ஊக்கும் திருவா சகத்தைத் தந்த
இறைமாணிக்கம்நீ
தொடுக்கும் கடவுட் பாடல் அளிக்கும்
அகமே தாலேலோ
சொல்லும் செயலும் ஒன்றாய் ஒளிரும்
சுடரே தாலேலோ

நம்மைக் காக்கும் பிள்ளைச் செல்வம்
நலமாம் என்றவனே
நாட்டில் இரும்புக் கட்டுப் பாடு
நல்லநிலை என்றவனே
செம்மல் பட்டம் போற்றி வணங்கும்
செம்மை பெற்றவனே
திருப்பதி அண்ணன் புகழ்பெறு வெண்பா
சிறப்பாய்த் தந்தவனே
வெம்மை மாறச் சட்டை கழற்றி
வீட்டில் இருப்பவனே
மிதியடி இன்றித் தெருவில் நடக்கும்
விருப்பம் கொண்டவனே
தம்மக்கள் பெயர் தமிழில் வைத்தவன்
தானோ தானே னோ
தருமச் சிவபுரி வருமா னிக்க
தானோ தானே னோ

நோயில் லாமல் வாழத் தக்க
நோன்புகள் நோற்றவனே
நோபல் பரிசு பெறுமள அக்கு
நூல்கள் செய்தவனே
வாய்மை என்றன் வழித்துணை என்று
வழுவாய்ப் பிடித்தவனே
மயக்கம் வெகுளி காமம் மூன்றும்
மடியச் செய்தவனே
ஓய்வில் லாமல் பலமணி நேரம்
உழைக்கக் கற்றவனே
ஊர்ப் பொது நலனுக் காயில் ஒருபங்(கு)
ஒதுக்கி வைத்தவனே
தாய்மைத் தமிழே தூய்மைத் தவமே
தாலோ தாலேலோ
தருமச் சிவபுரி வருமா ணிக்க
தாலோ தாலேலோ.

ஆள்வோ ராயினும் அவர்க்கும் அறிவுரை
அமையச் சொன்னவனே
அறஞ்செய் திடவே பொருள்செய் என்றே
அறிவுரை தந்தவனே
நான்போற் றியதால் மணித்துளி தோறும்
நற்றமிழ் பெற்றவனே
நாடறி யாமல் இறைவழி பாட்டை
நலமாய்ச் செய்தவனே
கோள்போற் றாமல் இறையொடு பேசும்
கொள்கை மிக்கவனே
கொடைவிளக் கேற்றிச் சான்றோர் நெஞ்சில்
கோயில் கொண்டவனே
தான்போற் றியநல் மணிவா சகமே
தாலோ தாலேலோ
தமிழ்ச் சிவபுரி வளமோங்க
தாலோ தாலேலோ.

செய்யும் கடமை அதையே மகிழ்வாய்ச்
செய்து முடிப்பவனே
செய்கை வருவாய் புகழென் றதனைத்
தெரிந்து துறந்தவனே
கைவைத் தொளிரும் மாணிக்கக் குறள்
காட்டு மகிழ்ந்தவனே
காலக் கடலில் கல மரம்போல்
காட்சி கொடுப்பவனே
பொய்யா நாவில் கபிலன் போலப்
புலமை பெற்றவனே
பொன்னு மணியும் தமிழே என்று
போற்றி வளர்த்தவனே
சைவத் தமிழே திருவா சகமே
தாலோ தாலேலோ
தருமச் சிவபுர வருமா ணிக்க
தாலோ தாலேலோ.

நீல மணிமிடற் றொருவன் அன்பால்
நினைவாய் வாழ்ந்தவனே
நேரம் கிடைத்த போதெல் லாம்தமிழ்
நிற்கப் படித்தவனே
ஞாலம் நின்புக ழேமிகப் பேச
நன்மை விளைத்தவனே
நடைபயி லுங்கால் கொடையயில் நின்ற
நகரத் தார்தவமே
சீலம் மிகுந்த நூல்கள் நூறு
திருமணச் சீராகச்
சேர்த்துத் தந்தால் வாழ்வு தமிழ்போல்
சிறக்கும் என்றவனே
ஆலத் தமிழ்தரு அங்கப் புலவ
தாலோ தாலேலோ
தருமச் சிவபுரி வருமா ணிக்க
தாலோ தாலேலோ.

கன்னித் தமிழில் தலைவர் களுக்குக்
கடிதம் தந்தவனே
கவிஞர் இந்திய ஒருமைப் பாட்டைக்
கட்டிக் காத்தவனே
வன்முறை இன்றி மக்கள் வாழும்
வாழ்வே வாழ்வென்று
மணிமொழி பலவும் தமிழில் எழுதி
வாழச் செய்தவனே
முன்னைத் தமிழ்ச் சேர் திருமந் திரமாய்
மூலன் சொன்னது போல்
மொழியார் அழியின் முடியார் அழிவர்
என்று மொழிந்தவனே.
தன்பற் றின்றித் தமிழ்ப்பற் றியவன்
தாலோ தாலேலோ
தருமச் சிவபுரி வருமாணிக்க
தாலோ தாலேலோ.

தற்புகழ்ச்சியைக் கனவிலும் எண்ணாத்
தாலேலோ
சங்கப் புலவர் மறுவடிவான
தமிழே தாலேலோ
பொற்பு மிகுந்த சன்மார்க்க சபைப்
புலவா தாலேலோ
பூங்குன் றத்துச் சிவபுரி மண்ணின்
பொலிவே தாலேலோ
கற்கும் போதே வள்ளுவம் ஆய
கண்ணே தாலேலோ
கற்ற படிக்கே நிற்கும் வழியைக்
கண்டாய் தாலேலோ
தற்சிந் தனையே நற்சிந் தனையாம்
தலைவா தாலேலோ
தமிழ்ச் சிவபுரி வடிமாணிக்கத்
தவமே தாலேலோ.

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
தவமே தாலோ தாலேலோ
சங்கப் புலவர் நெஞ்சம் அறிந்த
சதுரா தாலோ தாலேலோ
சமயம் கடந்து மொழியை வளர்த்த
தலைவா தாலோ தாலேலோ
தண்ணுக ஊன்றித் தானே உயர்ந்த
சமர்த்தா தாலோ தாலேலோ
அமுதத் தமிழைப் பயிற்று மொழியாய்
அறிவித் தவனே தாலேலோ
அரைநொடி கூட வீணாக் காமல்
அலைந்தாய் தாலோ தாலேலோ
இமயம் வணங்க உழைப்பால் உயர்ந்த
இசையே தாலோ தாலேலோ
இதயக் கோயில் உறைமா ணிக்க
இறைவா தாலோ தாலேலோ.

பண்டித மாமணி பேசும் தமிழின்
பயனாய் வந்தாய் தாலேலோ
பாரி அழகன் கபிலன் நினைப்
பாடி மகிழ்ந்தாய் தாலேலோ
கண்டவர் போற்ற இலக்கணம் தந்த
கலைமா மணியே தாலேலோ
கல்விப் பயனாம் தொல்காப் பியமும்
கடலின் அமுதே தாலேலோ
தொண்டில் உயர்ந்தது செந்தமிழ்த் தொண்டைத்
தொடர்ந்து வளர்த்தாய் தாலேலோ
சொல்லற் கரிய நீவோ சக்தின்
சுவையாய் வந்தாய் தாலேலோ
எண்பதை போற்றும் சங்கத் தமிழாய்
இருந்தாய் தாலோ தாலேலோ
இதுமா ணிக்கம் என்றுல கேத்தும்
இசையே தாலோ தாலேலோ


மூதறிஞர் செம்மல்
வ.சுப.மாணிக்கனார்
நூற்றாண்டு - சிலைதிறப்பு விழா
02.09.2017,சனிக்கிழமை
தமிழ்க்கதிர் அரங்கம்
மேலைச்சிவபுரி

4.சப்பாணிப் பருவம்



4. சப்பாணிப் பருவம்

ஈட்டுதற் கொடுகரம் எடுத்துவிட மறுகரம்
இரண்டுமே புகழ்பரப்ப
ஓடாணும் கொடையழகன் எடுத்தகலைக் கல்லூரி
இன்றமிழ் மணக்கவைத்தாய்
பாட்டிலும் உரையிலும் இலக்கியப் படிப்பிலும்
பலர்புகழ் பெற்றுநிற்கப்
பண்புடைய கல்லூரி மாணவர் வாழ்த்தநீ
பயன்களைக் கழகம் கண்டாய்
ஏட்டினில் உயர்ந்ததமிழ்ப் பாட்டுதிரு வாசகம்
ஆற்ற கதிர் மணிவிளக்கம்
எழுதுபண் டிதமணி அசானைப் போற்றிடும்
இனியமாணாக்கன் ஆனாய்
நாட்டடையழச் சொல்வீசித் தமிழ்ப்பகை விரட்டுவோன்
சப்பாணி கொட்டியருளே
அங்கநூல் பொங்கிவரும் எங்கள் மாணிக்கமே
சப்பாணி கொட்டியருளே.

மண்ணிலே மீண்டுமொரு மனுநீதிச் சோழனாய்
வாழ்ந்தவன் நீயல்லவோ
மன்னரே சொன்னாலும் வழிதவறிச் செல்லாத
மாணிக்கம் நீயல்லவோ
அண்ணா மலையரசர் பல்கலைக் கழகத்தின்
ஆணிவேர் நீயல்லவோ
ஆளுமொரு பங்கினை அறநிலைச் சொத்தாக
ஆக்கியதும் நீயல்லவோ
கண்ணாய்த் தமிழ்ச் சங்கம் காரைக் குடிமண்ணில்
கண்டவன் நீயல்லவோ
கடவுளை வாய்மையின் மறுவடிவ மாக்கியே
காட்டியதும் நீயல்லவோ
தன்னெடுத மானதமிழ் என்னவர் மாணிக்க
சப்பாணி கொட்டியருளே
தன்னைமுன் நிறுத்தாது தமிழைமுன் நிறுத்தினோன்
சப்பாணி கொட்டியருளே.

மனையையும் கொடைதந்து பாரியை வென்றவன்
வள்ளலாய் அழகன் ஆனான்.
வற்றாத கொடைவளம் பாடவே கபிலன் நீ
மாணிக்க மாகவந்தாய்.
முனைவராய்ப் பலரையும் உயர்த்தினாய் கல்லூரி
முதல்வனாய் ஒளிகொடுத்தாய்
மொழிவளம் பேணவே உயர்கலைக் கழகத்தை
முன்னின்று காத்திருந்தாய்
அனைவரும் வியக்கவே கொடைவிளக் கேற்றினாய்
அழகனுக் கழகுதந்தாய்
அடியேனை ஆட்கொண்டு திருவாசகத்தமிழ்
அன்பினால் எனக்களித்தாய்
தனையுணர்ந் தெழுதுமொழி தந்திந்தனைச் செல்வ
சப்பாணி கொட்டியருளே
தவமிகச் செய் மேலைச் சிவபுரியில் மாணிக்கம்
சப்பாணி கொட்டியருளே.

தமிழிலே பிறமொழிச் சொல்கலந்து எழுதிடும்
தமிழ்க்கொலை நடக்குதையா.
சலியாது பார்க்கின்ற தொலைக்காட்சி, திரைப்படம்
தமிழனை அழிக்குதையா.
அழகான செந்தமிழ் என்றுமுள தென்றமிழ்
ஆங்கிலம் கலந்துபேசும்
அரைகுறைத் தமிழாகி மக்கள்மொழி இதுவெனும்
அநியாயம் நடக்குதையா.
எமையாள வந்தவர் எவருமே தமிழ்காக்க
எதுவுமே செய்யவில்லை
எடுத்ததை மறைக்கவும் வழக்காடி நிற்கவும்
இவர்நேரம் போதவில்லை.
தமிழ்ப்பகை ஆன இவர் நெஞ்சம் திருந்தநீ
சப்பாணி கொட்டியருளே.
தவமிகச் செய்வோனைச் இப்புவியில் மாணிக்கம்
சப்பாணி கொட்டியருளே.

மானுடம் வென்றதம் மாவெனும் கம்பனார்
வாக்கையே வாழ்க்கை யாக்கி
மனத்திலும் மாசிலா மாணிக்க மாகவே
வையகம் போற்ற நின்றாய்
தேனனைய மனைவியின் உரிமை நெல் லிக்கனி
திகழ் உப்பங் கழியினோடு
சிறப்பாக ஒருநொடியில் நான்கு நா டகங்களைச்
செந்தமிழ்க் கனி யாக்கினாய்
வானகத் தேநின்று வள்ளுவர் மீண்டும் இம்
மண்ணிடை வந்ததைப் போல்
வள்ளுவச் சொற்பொழிவு மக்களுக் காகவே
வளமுறச் செய்துதந்தாய்
தானுயர் சுற்றதமிழ்த் தாய்பெற்ற தலைமகன்
சப்பாணி கொட்டியருளே
தவமிகச் செய்மேனைச் சிவபுரியில் மாணிக்கம்
சப் பாணி கொட்டியருளே.

ஒப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி
உயர்நீதி மன்றில் இல்லை.
உலகெல்லாம் உணர்ந் தோதற் கரியவன் தில்லையில்
ஒண்டமிழ் ஏறவில்லை.
அப்பாவி மக்களும் தமிங்கிலம் பேசியே
அருந்தமிழ் மறந்துவிட்டார்.
ஆட்சியில் இருப்பவர் பயிற்றுமொழி யாய்த்தமிழ்
ஆகாமல் செய்துவிட்டார்.
செப்பரும் இக்கொடிய தீவினை மாற்றநீ
தேசமெல் லாம் நடந்தாய்
செந்தமிழ் இயக்கமாய் மாறினாய். திருமுறை
தில்லையில் ஏற்றிவைத்தாய்
சப்பாணி ஆகாமல் தமிழ்வாழச் செய்தவன்
சப்பாணி கொட்டியருளே.
சத்தியச் சோதனை செய்த மாணிக்கமே
சப்பாணி கொட்டியருளே.

மங்கலம் தருகின்ற இறைவனை நீ உந்தன்
மடியிலே வைத்திருந்தாய்
மலர்மாலை சூட்டாமல் தவத்தினால் பெருவாய்மை
மணமலர் சூட்டி நின்றாய்
தங்குதிரு வாசகம் வாழ்வுமறை ஆக்கினாய்
தலைவனை நீயளித்தாய்
தற்சிந்தனை செய்து நற்சிந்தனை பெற்றுச்
சமயம் கடந்து நின்றாய்.
எங்கோனான் எண்ணினும் இறையருள் கிடைக்குமென்று
இன்பமாய் எழுதிவைத்தாய்
இறைவனைக் கண்டனன் எச்சொலும் அளவில் நீ
எளிமையால் உயர்ந்து நின்றாய்
சங்கத் தமிழ்மதுரைத் தனிவேந்தன் மாணிக்கம்
சப்பாணி கொட்டியருளே
சாரங்க பாணியொடு தமிழாய்வு செய்தவன்
சப்பாணி கொட்டியருளே

மறைமலை தமிழும் திருவிக தமிழும்
வளர்த்த தனிப் பிள்ளை
மாணிக்கத் தமிழ் என்றுல கேத்த
வள்ளுவம் தந்தவனே
கறைபடி யாத மனமும் வாக்கும்
கைகளும் பெற்றவனே
காலவெள்ளத்தில் அசல மரம் போல்
காட்சி கொடுப்பவனே
சிறைபெறா நீர்போல் துறைதோறும் ~~வளரும்~~ பாயும்
திறமைகள் மாய்ப்பவனே
செந்தமிழ் காக்க மாநில முழுதும்
திருவடி வைத்தவனே
குறைவிலா நிறைவாம் இறையருள் பெற்றவன்
கொட்டுக சப்பாணி
குருவருள் தரவே வருமாணிக்க
கொட்டுக சப்பாணி

என்றும் தமிழின் இலக்கிய மாக
எண்ணப் படுபவனே
யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்று நினைப்பவனே
கன்றை நினைந்தூடு தாயென வாசகம்
கண்டு மகிழ்பவனே
கம்பர் வள்ளுவர் காப்பியர் இளங்கோ
கலைதவழ் சித்திரமே
நன்றிது தீதெனக் கண்டறும் நாடிய
நற்றவ மெய்ப்பொருளே
நகரத் தார்கள் தமிழ்க்கேட் டரசன்
நல்கிய பெருவரமே
இன்றைக் கிழுபுகழ் முதுபெரும் புலவ
கொட்டுக சப்பாணி
இறைவடு தமிழ்த்தடு நிறைமாணிக்க
கொட்டுக சப்பாணி.

உதவாக் கரையென் றோதும் சொல்லை
ஒழியச் செய்தவனே
உதவும் கரையென் றாச்சான் றோரை
ஓதி மகிழ்ந்தவனே
இதயத் தாலே பிறருக் குதவி
இன்பம் பெற்றவனே
என்கடன் பணி செய்து கிடப்பது
என்றே கற்றவனே
மதிவன் முயதே நோய் மாறும்
விதியைச் செய்தவனே
மேலோர் கூறும் புகழுரை கேட்டால்
விரைவாய்க் குனிபவனே
குத்தே அருளும் பூசனை மறவாய்
கொட்டுக சப்பாணி
குறைவறு தமிழ்தரு நிறைமாணிக்க
கொட்டுக சப்பாணி.



5.முத்தப் பருவம்

௫. முத்தப்பருவம்

பெரும்புலவன் என்றசொல் பெருந்தவம் செய்ததால்
பேரறிஞன் நீபிறந்தாய்
பேச்செலாம் செந்தமிழ் மூச்சிலே பாரதம்
பெருவளம் பெறவுரைத்தாய்
அரும்பெரும் பாரதத் தாய்நாட்டைச் சிறைமாட்
அந்நிய நாடு தாக்க
அதுகண்டு சினந்தனை தற்காப்புக் காகவே
அணுகுண்டு வேண்டுமென்றாய்
திரும்பியும் பார்க்காத தமிழனை ஊக்கவே
செந்தமிழ்ச் சூடு தந்தாய்
திருநாடு வாழவுயர் தேசிய மறையாகத்
திருக்குறள் வேண்டுமென்றாய்
கரும்பான கவிபாடி இரும்புமன மாற்றும் நீ
கனிவாயின் முத்தமருளே
காணக்கண் கோடிதரும் மாணிக்கச் செல்வனே
கனிவாயின் முத்தமருளே.

செண்டாடு அந்தரர் கொண்டாட ஆடுவோன்
தில்லையில் தமிழ்படித்தாய்
சீர்மிக்க மெய்கண்ட வித்தியாசாலையில்
செந்தமிழ்ப் புலவன் ஆனாய்
பண்டிதர் கொண்டாடும் பண்டித மணியிடம்
பைந்தமிழ் கேட்டுணர்ந்தாய்
பல்கலைக் கழகத்தில் அண்ணா மலையரசர்
பரிவினால் சேர்ந்துவிட்டாய்
எண்டிசை போற்றவளர் அழகப்பர் கோயிலில்
ஆற்ற ஆசிரியனாகி
இருபத்தி ரெண்டாண்டு செந்தமிழ் முத்தினை
எங்களுக்கு ஈன்று தந்தாய்
கண்ட இப் பிறவியைத் தொண்டுசெய வைத்தவன்
கனிவாயின் முத்தமடுமே
காணக்கண் கோடிதரு மாணிக்கச் சொல்மால
கனிவாயின் முத்தமடுமே.

நல்லாவின் பால் முழுதும் கன்றுக் களிக்காமல்
நமக்கது கொடுப்பதைப் போல்
நல்வாழ்க்கை என்பது பிறர்க்கு உழைத்திடும்
நலவாழ்க்கை என்று வாழ்ந்தாய் -
வெல்லரிய செந்தமிழ் நூல்பலவும் தந்தநீ
வேகமாய்ப் படித்திடாமல்
விளங்கிப் படிக்கவே கருத்துக் குறியணை
வித்தகச் சொல் கொடுத்தாய்.
இல்லறச் சாவியைத் தலைவியால் கொடுப்பதே
இன்தமிழ்ப் பெருமை என்றாய்
ஏகம்மை மனமகிழ இல்லறம் நடத்தினாய்
இருமூன்று பேறுபெற்றாய்
கல்லைப் பிசைந்துகனி யாக்குநூல் கற்றவன்
கனிவாயின் முத்தமருளே.
காணக்கண் கோடிதரு மாணிக்கச் சொல்லாளர்
கனிவாயின் முத்தமருளே.

தேசப்பற் றதன்முனே ஈசனார் பற்றுமே
சிறியபற் றென்றுரைத்தாய்
செப்பிடும் மதமொழி சாதியைப் பேசாத
தேர்தலே தேர்த லென்றாய்
பாசமுறும் இந்தியப் பதினான்கு மொழிகளும்
பாராளு மன்ற மேறப்
பார்ப்பதே பொதுநலம்-வாய்மையை வாக்கிற்குப்
பணயமாய் வைக்கவேண்டாம்.
உசுவைத் தொண்டனே காட்டிக் கொடுத்தனன்
இந்நிலை இனியும் வேண்டாம்.
இத்தமை எண்ணங்கள் மாற்றுவது வாய்மையென்று
எங்களுக் கெடுத் துரைத்தாய்
காசுபணம் எண்ணாமல் பேசுதமிழ் எண்ணியவன்
கனிவாயின் முத்தமடுளே
காணக்கண் கோடிதரும் மாணிக்கச் சொல்லனை
கனிவாயின் முத்தமடுளே.

தெள்ளுதமிழ்க் கம்பனைக் காப்பியத் தில் பெரிய
செல்வன் என்றே அழைத்தாய்
திகழ்மொழிபெயர்ப்பல்ல மொழிபிறப் பாம் என்று
சிந்தையில் மகிழ்ச்சிகொண்டாய்
வெள்ளமாம் தமிழ்நூலில் எதையேனும் முழுமையாய்
விளங்கப் படிக்க வேண்டும்.
வேண்டாத ஒட்டுத்துணி. முழுத்துணியையே
விரும்புதல் நல்ல தென்றாய்
"வள்ளுவம் கற்றவன் வாழா திரான்" என்று
மந்திரச் சொல் உரைத்தாய்
மற்றுநான் செய்தவம் பலித்ததால் இன்றெந்தன்
மடியில்நீ குழந்தையானாய்
கள்ளம் தொடாதகனி பிள்ளைப் பெருஞ்செல்வம்
கனிவாயின் முத்தமருளே
காணக்கண் கோடிதரு மாணிக்கச் சொல்லாளி
கனிவாயின் முத்தமருளே.

கானுண்ட இடமெலாம் கலையுண்ண வைத்தவன்
கர்ணனை வென்ற வள்ளல்
கடையேழு வள்ளலும் சேர்ந்தகொடை அழகனார்
கட்டிய கலைக்கோயிலில்
வானுண்ட முத்துசிவன் மலர்மலர வைத்தனை
மணித்தமிழ் வளர்க்கநீயே
வைத்த கலைக் கழகத்தில் உறுப்பினர் ஆகி நீ
வழங்கு தமிழ் அமுதமன்னி
நானுண்ட காலங்கள் நற்காலம் எக்காலும்
நானதை மறப்பதுண்டோ
நற்றமிழ் மாணிக்க முத்தம் கிடைக்கவே
நான் ஆசைப்பட்டு நின்றேன்
தேனுண்ட செந்தமிழ்ப் பாவேண்டும் செம்மலே
திசையாவின் முத்தமெனே
சிவபுரிச் சான்றோரின் தவமான மாணிக்கம்
திசையாவின் முத்தமனே

அனைவரும் போற்றவளர் அழகப்பர் கல்லூரி
அருள்குறிக் கோளாகவே
அன்பறம் பணியெனும் அவைகளைத் தாமரை
அறவாழி திருவிளக்காய்த்
தனிமனித இமயமாம் கம்பனார் அழப்பெரு
தமிழினால் வழிவகைக்கத்
தக்கவன் பாவினால் அச்செயல் போற்றியே
தரமுடன் நீ வாழ்த்தினாய்
கனவிலே ராயசொ வெள்ளைவா ரணம் வரக்
கடவுளைக் கண்டுகொண்டாய்
கவின்புதுமைக் குறள்பா அண்ணல்சுப் பிரமணியர்
கருணையில் நீநனைந்தாய்
தினையளவு செய் உதவி பனையளவாய் எண்ணுவாய்
திருவாயின் முத்தமருளே
சிவபுரிச் சான்றோர்செய் தவமான மாணிக்கம்
திருவாயின் முத்தமருளே.

வற்றாத் தமிழ்க்கடல் மாணிக்கம் என்றெனேர்
வளமனை தேடிவந்து
மாண்புடைய தமிழகப் புலவர்கள் தலைவனாய்
மணிமுடி சூட்டநின்றாய்.
கற்றவர் தொழும்காமராசரின் பல்கலைக்
கழகத்தில் துணைவேந்தராய்
கல்வியொடு செல்வமும் சேர்த்துவைத் தாய் அதைக்
காப்பாற்றி வாழவைத்தாய்.
பெற்றவர் வைத்த பேர் அண்ணா மலை அதைப்
பெருந்தமிழ் மலையாக்கினாய்
பேச்செலாம் தமிழாக மூச்செலாம் சிவமாகப்
பெருந்தவம் செய்துவிட்டாய்
சுற்றிய பெற்றநீ என்னைக் குழந்தையாய்
முத்தம் கொடுத்தருள்கவே
சிந்திவரு செந்தமிழ் தந்தருள மாணிக்கம்
முத்தம் கொடுத்தருள்கவே

செக்கச் சிவந்த தாமரையின்
சிமிழ் வாய் திறந்து வருமுத்தும்
செந்நெல் முத்தும் கன்னலிடைத்
திரளும் முத்தும் மதயானைப்
பக்கம் வளரும் தந்தத்தில்
பார்த்து வளர்த்த பருமுத்தும்
பலரும் போற்றக் கொற்கையினில்
படரும் பெருமை வெண்முத்தும்
மக்கள் போற்றும் முத்தாக
வளமாய்த் தோன்றும் ஆணையுன்
மணிவாய் முத்தம் அதற்கீடாய்
வருமோ? அதனால் வேண்டுகிறேன்
முக்கட் கரும்பாய் இனிப்பவனே
முத்தம் தருக முத்தமே
முன்னோர் தவமாம் மாணிக்க
முத்தம் தருக முத்தமே.

காத்து வளர்த்துத் தமிழ் போற்றும்
காரைக் குடியில் உனைக்காணக்
கம்பன் காந்தி இணைந்த தமிழ்க்
கடலாம் ராய சொக்கலிங்கர்

சீர்த்தி மிகுந்த நாடகத்தை
சிறப்பாய்த் தந்த முருகப்பா
தேசப் பற்றைக் கம்பனுடன்
சேர்த்திடும் கம்பன் அடிப் பொடியார்

கூர்த்த மதியன் திருத்தொண்டர்
குன்றக் குடியன் பெருந்துறவி
கூறும் சான்றோர் பலர் வந்தார்
குழந்தை முத்தம் கேட்கின்றார்

மூத்த தமிழே அவைமுதலே
முத்தம் தருக முத்தமே
முன்னோர் தவமாம் மாணிக்க
முத்தம் தருக முத்தமே.


உலகத் தமிழ் அறக்கட்டளை
WORLD TAMIL TRUST, (WTT)
மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின்
நூற்றாண்டு விழா





6.வருகைப் பருவம்

6. வருகைப் பருவம்

செந்தா மரையாள் அருள்பொழியும்
சீரார் வயிர வண்கோயில்
திருவே வருக தமிழ்மறவாச்
செம்மல் வருக அப்பையா
மைந்தா வருக கலைக்கழகம்
வைத்தாய் வருக ஏகம்மை
மணாளா வருக அழகப்ப
வள்ளல் வாழக் கொடைவிளக்குத்
தந்தாய் வருக இருமூவர்
தந்தை வருக கதிரகத்தின்
தலைவா வருக தெய்வானைத்
தாயின் மடியில் குழந்தையென
வந்தாய் வருக மாணிக்க
மணியே வருக வருகவே
வளர்சேர் மேலைச் சிவபுரியின்
வாழ்வே வருக வருகவே

எண்ணம் போலச் சொல்செயலும்
என்றும் சிறக்கத் தமிழ்என்றே
இதயம் துடிக்க வாழ்ந்தமையால்
எங்கள் நெஞ்சில் நிலைத்தவனே
மண்ணை உயர்த்தும் காந்திக்கே
மனமாம் கோயில் தனைக்கட்டி
வாய்மைப் பணியை எந்நாளும்
வாழ்வுப் பணியாய்க் கொண்டவனே
அண்ணல் காந்தி உயிர்நீத்த
ஐந்து மணியை நாடோறும்
அருமை வழிபா டாற்றிடவே
அமைத்துக் கொண்ட அன்புருவே
வண்ணத் தமிழே மாணிக்க
மணியே வருக வருகவே
வளர்ந்தோன் மேலைச் சிவபுரியின்
வாழ்வே வருக வருகவே.

ஒருவன் வாளியை ஒரு வன்வாளியாய்
உயர்த்தும் நாயக வருகவே
உம்பரும் தொழும் கம்பன் நெஞ்சினை
உணர்த்து பாவல வருகவே
அருமை யாய்த்தமிழ் சூழ பாடிய
ஔவை நெஞ்சினன் வருகவே
அயல்மொழிக் கலப் பின்றி யேதமிழ்
ஆய்ந் துரைத்தவன் வருகவே
புரமெரித்தவன் அணியு நீற்றினைப்
போற்றி நின்றவன் வருகவே
புற்று நோய்தரும் புகைப்பிடிப்பனைப்
புரிந்துரைத்தவன் வருகவே
கருவிலே திரு வுடைய நாயகன்
கரிய மாமுகில் வருகவே
காவி யத்தமிழ் ஆயுமாணிக்கக்
கவிதை நாயகன் வருகவே

சொல்லும் மனிதரை அதிகம் புகழ்வதைத்
தொழுநோய் என்றவனே
தூய மனத்தால் தற்சிந் தனையைத்
தொடர்ந்து செய்தவனே
அல்லும் பகலும் இறைவனை என்றும்
அன்பு மிகுந்தமையால்
அவனே என்னைக் கைவிட வில்லை
ஆண்டான் என்றவனே
இல்லற வாழ்வை நல்லற மாக்கும்
இயல்பைப் பெற்றவனே
இறைவன் நினைவை வெளிக்காட் டாமல்
இருக்கக் கற்றவனே.
கல்லைக் கரைக்கும் திருவா சகத்தின்
கனிவே வாராயோ
காரைக் குடியின் பேரை உயர்த்தும்
கடலே வாராயோ

அன்னைத் தமிழை அம்பலமேற்றும்
ஆற்றல் பெற்றவனே
ஆடல் வல்லான் நெஞ்ச நினைப்பை
அறிந்து முடித்தவனே
மன்னும் தமிழ்ச்சீர் திருமுறை எல்லாம்
மன்றேறிப்பாட
மண்ணில் உண்ணா விரதமிருந்து
வருத்தம் தீர்த்தவனே
தன்னிகரில்லாச் செம்மல் இமயம்
தமிழ்ச்சீர் காந்தியெனத்
தக்கவர் போற்றப் பலபட்டங்கள்
தானே வந்துயரக்
கன்னல் தமிழைத் தன்னுயிர் என்ற
கடலே வாராயோ
காரைக் குடியில் அபமாணிக்கக்
கனியே வாராயோ.

வாய்மை வாழ்வே வரலாறாக
வாழ்ந்த பெருந்தகையே
வள்ளல் பாரி வாழ்ந்த பறம்பு
மண்ணைச் சார்ந்தவனே
தூய்மை நேர்மை வாய்மை எளிமை
தொடரும் தன்மையனே
சொல்சிக் கனமும் இல்சிக் கனமும்
கூடி வளர்த்தவனே
காயாம் நெஞ்சைக் கனியாய் மாற்றும்
கவிதை தந்தவனே
கணக்காய் வாழ்ந்து கணக்கில் லாத
காலம் நிற்பவனே
தாயாம் இன்பத் தமிழை வளர்க்கும்
தலைவா வாராயோ
சங்கத் தமிழைத் தருமா ணிக்கச்
சதுரா வாராயோ

மட்டவிழ் கவிதைப் பட்டினத் தழகன்
மரபில் வந்தவனே
மருத மாணிக்கத் திங்கள் ஆகி
வாழ்வில் இனித்தவனே
சட்டாய் வாழ்ந்தே மக்கள் மனத்தைச்
சிறப்பாய்ச் செய்தவனே
சிறுபொழு தேனும் வீணாக் காமல்
செந்தமிழ் தந்தவனே
பட்டம் பதவி உன்னைத் தேடப்
பண்பால் உயர்ந்தவனே
பகுத்தறி வுக்கும் இறையன் புக்கும்
பாலம் போட்டவனே
வட்டிக் கணக்கை விட்டெழுந் தவனே
மடிமேல் வாரானோ?
வயிரவர் கருணைப் பயிர்மாணிக்கம்
மடிமேல் வாரானோ

அரசிய லுக்கும் கட்சிக ளுக்கும்
அப்பாற் பட்டவனே
அன்புத் தமிழின் வாழ்வுக் காக
அனுப்பப் பட்டவனே
சிரசு செழுங்கித் தமிழைக் காக்க
முன்னால் வந்தவனே
செப்பால் வாய்மை திருவாசகமே
மூச்சாய்க் கொண்டவனே.
பரசிவ மாகித் தமிழின் பகையைப்
பாட்டால் எரிப்பவனே
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்
பதியச் செய்தவனே.
தரிசாய்க் கிடக்கும் தமிழ்மனம் வளரத்
தலைவா வாராயோ
தன்னில மறியாத் தமிழ்மாணிக்கத்
தவமே வாராயோ.

கண்டவர் வியக்கக் கம்பனை ஆய்ந்த
கனியே வாராயோ
காமம் வெகுளி மயக்கம் மூன்றும்
கடந்தாய் வாராயோ
தொண்டில் உயர்ந்த சிதம்பரச் செக்கைத்
தொட்டாய் வாராயோ
சொல்லில் சிக்கனம் காலச் சிக்கனம்
தொடர்ந்தாய் வாராயோ
தண்டி யாத்திரைக் காந்தியைப் போற்றும்
சதுரா வாராயோ
தமிழுக் காக யாத்திரை செய்த
தலைவா வாராயோ
பண்டித மணியின் வழிவழி அடிமை
பாரினில் வாராயோ
பழகும் தமிழே பாண்டியன் பரிசே
பாரினில் வாராயோ.

சேர்த்துச் சேர்த்துப் பொருளை வளர்த்துத்
திருப்பணி செய்யும் மரபினிலே
செந்தமிழ்த் தாயின் சொற்கோயில் பணி
செய்து மகிழ்ந்த திருமகனே
காத்துக் காத்துக் கிடந்த தமிழ்த்தாய்
கண்கள் பூத்துப் போகுங்கால்
காப்பேன் உன்னைக் கலங்காய் என்று
கையைப் பற்றி வளர்த்தவனே.
மூத்தோர் வார்த்தை முழுதும் விளங்க
மூதுரை தந்த முதுமணியே
மொழியும் ஔவை பாடலுக் கெல்லாம்
முன்னுரை செய்து காத்தவனே
பார்த்துப் பார்த்துப் புதுச்சொல் ஆக்கிப்
பட்டியல் இட்டாய் வாராயோ
பயிற்று மொழியாய்த் தமிழை ஆக்கப்
பாடுப துயிலே வாராயோ

7. அம்புலிப் பருவம்



7. அம்புலிப் பருவம்

திங்களைப் போற்றுதும் என்று தமிழ் பாடிய
சிலம்பினைக் கற்றதாலும்
சிவபிரான் கைபட்ட திருவாசகத்திலே
தேய்மதியன் நின்றதாலும்
சங்கதால் பாடலில் அற்றைத் திங்களெனும்
தனிமொழி கேட்டதாலும்
தமிழிலே தாவென்னை மதிசூடி என்றிறையைச்
சம்பந்தர் சொன்னதாலும்
மங்கையர்க் கரசியின் மதுரையில் பாண்டியர்
மதிக்குலம் என்பதாலும்
மாணிக்கப் பிள்ளை சிறு வாண்மதி உன்னையே
வாவென் றழைத்து நின்றான்
அங்கணன் கயிலையில் அங்கென்ன செய்கிறாய்
அம்புலி ஆடவாவே
ஆணிப்பொன் நாணவரு மாணிக்கச் செம்மழலை
அம்புலி ஆடவாவே.

வையகம் அனைத்தையும் நீசுற்றி வருகிறாய்
மதியெனப் பேர்படைத்தாய்
வல்லவராம் சிவபிரான் கருணையொடு காப்பாற்ற
வளர்ச்சைக் காட்டியுற்றாய்
தையலர் முகமெனத் தோன்றுகின்றாய் அருந்
தமிழென இன்பளிப்பாய்
தன்னையே அறிந்தின்பம் உற்றிடவே நீயொரு
தந்திரம் சொல்லிநிற்பாய்
தெய்வங்கள் பலகோடி இருப்பினும் கண்ணுக்குத்
தெரிபவன் நீ என்பதால்
சிவபுரித் தலத்தில் உயர் தெய்வானை பெற்றசீர்த்
திருமகன் உனையழைத்தான்
ஐயனின் திருமுடி தன்னைவிட் டிறங்கியே
அம்புலி ஆடவாராய்
ஆணிப்பொன் [illegible] மாணிக்கச் செம்மையுடன்
அம்புலி ஆடவாராய்

கண்ணுக்குள் இனிமையாய்க் காட்சி தருகிறாய்
கயிலையில் வலம் வருகிறாய்
காதலர் இன்புறத் தேன்நிலவு காட்டியே
கண் முகில் இடை மூடுவாய்

மண்ணுக்கு மிக அருகில் நீ இருப்பாய் இதே
மலருக்கு மன்னனாவாய்
வள்ளலாம் ஈசனின் இடது கண் என்றுனை
வையகம் போற்ற நிற்பாய்
தண்ணளித்த மதியெனத் தமிழ் போல் இனிக்கிறாய்
தரணியில் கொடையுமானாய்
அங்கதரர் புலமை போல் நீ ஒளிர் விப்பதால்
தமிழ்மகன் உனையழைத்தான்
அண்ணா மலை என்று தாய் வைத்த பேருடன்
அம்புலி ஆடவாவே
அணிப்பொன் னாகவும் மாணிக்கச் செம்மையுடன்
அம்புலி ஆடவாவே

சிறந்த நீ மதியழகன் இவன் உலக மதியழகன்
செந்தமிழ் அமுதளிப்பான்
சிவன்முடியில் நீ இருப்பாய் இவன் தமிழ் மேடைச்
சிவபுரியில் வீற்றிருப்பான்.

நிறைந்தமதி என்றுனை மாதத்தில் ஒருமுறை
நேயரெல்லாம் புகழ்வார்
நெஞ்செல்லாம் நிறைந்தவன் இவன்மதி நாளெல்லாம்
நிறைந்தமதி யாயிருக்கும்.

பிறந்தபாற் கடலினால் நீ உயர்ந் தனை இவன்
பெருந்தமிழ்க் கடலானவன்
பேசாமல் நீ இருப்பாய் இவன் வள்ளுவப்
பேச்சினால் புகழ்பெற்றவன்

அறந்தனைத் தாங்கிப் பிறந்தவன் இவனுடன்
அம்புலி ஆடவாவே
அணிப்பொன் நாணவும் மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆடவாவே.

பகலெல்லாம் மறைகிறாய் இரவிலே வருகிறாய்
பயந்துநீ ஒளிந்துகொள்வாய்
பாரினில் இரவுபகல் எண்ணாமல் செந்தமிழ்ப்
பகலொளி இவன்விரிப்பான்
தகவுடன் உன்னைஇச் சான்றோன் அழைத்திடத்
தவறென்ன நீ புரிந்தாய்
அங்கரன் அடியவன் நீஎனக் கேட்டதால்
தமிழ்மகன் உனையழைத்தான்.
இகலெல்லாம் போக்கிடும் இவன்உரை கேட்கஇங்கு
எத்தனை பேர்கள் உள்ளார்!
இவர்களைப் பார்க்காமல் உன்னையே அழைக்கிறான்
எழுந்திடத் தாமதம் ஏன்
அகத்தியும் முத்தியும் அறிவொளிசெய் பிள்ளையுடன்
அம்புலி! ஆடவாவே
அணிப்பெறன் நாணவரு மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆடவாவே.

உலகிலே வெளியிருள் நீ போக்குவாயிவன்
உள்ளத் திருள் நீக்குவான்
ஒளியே வானில் நீ அலைகிறாய் இவன் புகழுக்கு
ஒருகாலும் அலைந்ததில்லை
கலைகளில் சிலகலை உனக்குண்டு இவன்தமிழ்க்
கலைகளுக் கெல்லை இல்லை
கட்டுரை நாடகம் இலக்கணம் சொற்பொழிவு
கவிதையும் இவன் விரிப்பான்.
நிலையில்லா மதியம்நீ வளர்கிறாய் தேய்கிறாய்
நிறைகுறை உனக்குண்டு
நெஞ்சமாம் தமிழான நிறைகுடம் இவனிடம்
நிறையுண்டு குறைகள் இல்லை
அலைகடல் அமுதமாய்த் தமிழ்த்தேம் இவனுடன்
அம்புலி ஆடவாவே
ஆணிப்பொன் நிலவு மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆடவாவே

சந்திரன் நீ அமுது பொழிகிறாய் இவன்தரும்
தமிழ் அமுதை வென்று நிற்கும்
சங்கரன் முடியிலே நீ இருப் பாய் இவன்
தமிழ்நெஞ்ச சிவன் கோயிலாம்.
சொந்தமாய் ஒளியில்லை கதிரவன் ஒளியில் நீ
சோதியாய்த் தோன்றுகின்றாய்
சொல்லரிய கதிரச் செல்வனாம் இவன்தமிழ்
சொந்தமாய் ஒளிகொடுக்கும்
வந்துனைத் திட்டுவார் பிரிந்த காதலர் இவன்
வாக்கினால் வாழவைப்பான்
மறைகிறாய் மேகத்தில் இவன் புகழ் வானத்தில்
மறைப்பதற் கேதுமில்லை
அந்தரத் துள்ளநீ செந்தமிழ்ச் செல்வனுடன்
அம்புலி ஆடவாவே
அணிப்பொன் நாணவரு மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆடவாவே

கள்ளமில் லாமனம் கொண்டவன் இவனுடன்
கை கோர்த்து நீ இருந்தால்
கறையெல்லாம் போகும் உன் குறையெல்லாம் மாறும் நீ
கனிதமிழ் அமுதுண்ணலாம்.
வெள்ளமாய்ப் பாய் கங்கை நண்பன் நீ இவன் கவிதை
வெள்ளத்தில் நீ மகிழ்வாய்
வேகமாய் அழிவினைப் பற்றாமல் இவனுடைய
வேலனார் மயில் விரட்டும்.
உள்ளமே கோயிலாய் வாழ்பவன் இவன் உனை
ஒருதரம் பாடிவிட்டால்
உலகெல்லாம் உன்புகழ் நிலைபெறும் நீ பெற்ற
உயர் மதிப் பெயர் விளங்கும்
அள்ளிவரு துள்ளுதமிழ் வள்ளுவப் பிள்ளையுடன்
அம்புலி ஆட வாவே
ஆணிப்பொன் நாணவரு மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆட வாவே.

செந்தமிழ் கற்ற இவன் நீவரா விழல் உன்றன்
திருமுகம் பார்க்கமாட்டான்.
செம்மை சேர் சங்கத்துப் பாட்டெலாம் நீவடும்
செய்தியைச் சொல்லமாட்டான்.
பைந்தமிழ்ச் சிலம்பினில் திங்களைப் போற்றிடும்
பாட்டுவரி மாற்றிவிடுவான்
பக்தனிவன் வேண்டினால் சிவபிரான் உன்னுடைய
பதவியை இறக்கிவிடுவார்.
வந்துவினை யாடாமல் நிற்கிறாய் உன்னுடைய
மதி என்ன மதி மதியமே?
வல்லவன் நல்லவன் கல்வியன் இவனுடன்
வாது நீ செய்யலாமோ?

அந்திசாயுந் திட்டதே சிந்துநீ இவனுடன்
அம்புலி ஆடவாவே
அணிப்பொன் நாணவரு மாணிக்கச் செம்மலுடன்
அம்புலி ஆடவாவே.

பேரிலே நீமதி பெருமையில் இவன்மதி
பெருமதிப் புள்ள பிள்ளை
பெற்றவர் மதிக்கவும் பிறந்தவர் துதிக்கவும்
பேசுமதி கொண்ட பிள்ளை
ஊரெலாம் நீசுற்றி இளைக்கிறாய் இப்பிள்ளை
ஒருகாலும் இளைக்காதவன்
உன்னிடம் மறுவுண்டாம் இவன்மொழி கேட்பவர்
உளத்திலும் களங்கமில்லை
பாரெலாம் காணநீ தேய்கிறாய் வளர்கிறாய்
பயந்து முகில் தன்னில் ஒளிவாய்
பண்புமிகும் இப்பிள்ளை சொல்லாலும் செயலாலும்
பலரையும் ஒளிரவைப்பான்.
ஆரமுத மொடுநீ பிறந்ததால் அழைக்கிறான்
அம்புலி ஆடவாவே
அணிப்பொன் நாணவரு மாணிக்கச் செம்மையுடன்
அம்புலி ஆடவாவே


வ.சுப. மாணிக்கனார் நூல்கள்
தற்சிந்தனைகள்
ஒப்பியல் நோக்கு
காப்பியப் பார்வை
கம்பர்
தொல்காப்பியக் கடல்
திருக்குறட் சுடர்
சங்க நெறி
இலக்கியச் சாறு



8.வாய்மைப் பருவம்

8. வாய்மைப் பருவம்

செந்தமிழ்க் கப்பலைக் காலமெனும் ஆழியில்
செலுத்தப் பிறந்தவன் நீ
திசைமாறிப் போகாமல் தமிழன்பர் இருவினைத்
தேடிவந் தாண்டவன் நீ.
வந்தனைக் குரியரும் கீர்த்தியத் திருநாடு
வல்லரசாய் மாற வேண்டும்
வானைச் சுட்டியே மற்றநாட் டனையும்
வணங்கியே போக வேண்டும்.
சிந்தனை உயரநம் தேசிய நூலாகத்
திருக்குறள் ஆகவேண்டும்.
சிறுமை நம்மைக்கண் டஞ்ச வேண்டும் என்று
தேசமொழி சொன்னவன் நீ.
மைந்தனாய்த் தமிழன்னை மடிவீற் றிருப்பவன்
வாய்மை வளர்த்தருள்கவே
வையகம் காக்கவரு தெய்வமாணிக்கமே
வாய்மை வளர்த்தருள்கவே.

பொன்னான நம்நாட்டில் அத்தனைத் துறையிலும்
பொய்களே கோலோச்சுதே
போகின்ற போக்கிலே பொய்மார் பொழிகின்ற
பொய்யர்க்குப் புகழோங்குதே.
தன்மனம் மாசடையக் கையூட்டும் ஊழலும்
தலைவிரித் தாடுதையா.
சட்டமும் தகுதியும் பெட்டிக்குள் அடங்கியே
தடமாறிப் போகுதையா.
இன்னலை மாற்றவே எழுத்தினைப் படையாக்கி
எங்களைக் காக்கவந்தாய்
இன்னுமொரு திருக்குறள் நீகொடுத் தாய்நாங்கள்
இன்னமும் திருந்தவில்லை
மன்னவன் நீ எங்கள் மனமெலாம் குடிகொண்டு
வாய்மை வளர்த்திடுகவே
வையகம் போற்றிடவும் பொய்மை மாண்டிடவும்
வாய்மை வளர்த்திடுகவே

முத்து முத் தானைக் எழுத்திலே செந்தமிழ்
மூச்சுவிட்டு யெழவைத்தாய்
முப்பால் உரைத்தவன் வள்ளுவப் பக்கத்தில்
முன்நின்று பேசவைத்தாய்
புத்தகம் தூக்கியே தோளிலும் நெஞ்சிலும்
புதுவலிமை பெற்றுநின்றாய்
பொன்னான பதவிகள் பிறர்தரும் பலபரிசுப்
பொருட்களை நீ வெறுத்தாய்
நித்தமும் கடவுளை நினைத்தனை பலசமய
நெறிகளை ஒதுக்கிவைத்தாய்
நிழற்படம் விரும்பாமல் எளிமையாய் வாழ்ந்தநீ
நற்செல்வம் படமாயினாய்
வைத்தமா நிதியெனத் தமிழுக்கு வாய்த்தவன்
வாய்மை வளர்த்தருள்கவே
வயிரவன் கோயிலின் உயிரான மாணிக்கம்
வாய்மை வளர்த்தருள்கவே

தாய்மையே வடிவமாய்ச் சொல்லிலும் செயலிலும்
தொடர்ந்ததைக் கடைப்பிடித்தோன்.
தொல்காப் பியம்குறள் திருவா சகம்எனும்
சுடர்வீசும் முக்கட்டிறான்.
தாய்மனம் பெற்றவன் தமிழ்பல கற்றவன்
அஃதால் புலமை மிக்கோன்
தற்சிந் தனைசெய்து தன்மனத் தாய்மையைத்
தானே அளந்தறிந் தோன்
நேயரே ஆயினும் நீதியைத் தாண்டாத
நேர்மையால் மிகஉயர்ந் தோன்.
நெஞ்சிலே வஞ்சகம் கொஞ்சமும் இல்லாத
நிலையினால் இமயமா னோன்
வாய்மைமேல் ஆணையிடும் மனத்தாய்மை கொண்டவன்
வாய்மை வளர்த்தருள்கவே
வயிரவன் கோயிலின் உயிரான மாணிக்கம்
வாய்மை வளர்த்தருள் கவே.

மாணிக்கப் பிள்ளைகள் அறுவரும் ஒளிதரும்
மாணிக்கப் பிள்ளை என்றே
வையகம் போற்றும் ஏகம்மை ஆச்சியை
மனத்திலே வைத்து வாழ்ந்தாய்
காணிக்கை ஆக்கியே இல்லத்தை ஆசான் பேர்க்
கதிரகம் என்றழைத்தாய்
கை சுத்தம் வைசுத்தம் என வாழ்ந்து வாய்மையாம்
கடவுளை நீ உணர்ந்தாய்.
ஏணி போல் பலரையும் தமிழ்வாழ்வு காண
ஏற்றி வைத்து உயர்ந்திருந்தாய்
எளிமையும் அருமையும் இணையவே ஈசன் போல்
எங்களைக் காக்க வந்தாய்
வாணிகக் குடியினில் வந்தவன் நாடேற
வாய்மை வளர்த்திடுங்களே
வயிரவன் கோயிலின் உயிரான மாணிக்கம்
வாய்மை வளர்த்திடுங்களே.

மஞ்சளாய் வெயில்தரும் மாலைபோல் இன்பமாய்
வாழ்வதைக் காட்டுதற்கோ
மங்கலப் பொங்கலில் மணம்வீச மஞ்சள் போல்
மனைவளம் காட்டுதற்கோ
தஞ்சமென வந்தாரைக் காத்திடும் தங்கமனத்
தனிநிறம் காட்டுதற்கோ
தமிழ்மஞ்சள் பூசிவரும் கன்னிபோல் வாழ்ந்திட்ட
தவவாழ்வு காட்டுதற்கோ
நஞ்சமுத மாக்கிடும் எம்பிரான் பொன்மேனி
நலத்தினைக் காட்டுதற்கோ
நற்றமிழ் வாழவரும் ஒண்எழுது கோல்முனை
நன்னிறம் காட்டுதற்கோ
மஞ்சளாய் மேல்சட்டை அணிந்துவரு மாணிக்க
வாய்மையைக் காத்தருள்கவே
மதுரைக்கு வாய்த்த அதி மதுரத் தமிழ்ப்புலவ
வாய்மையைக் காத்தருள்கவே.

மண்பதை போற்றும் இறைநூல் அதுவே
மக்கட் குயிராகும்
வளரும் புலமைத் தொல்காப் பியம்தமிழ்
மரபுக் குயிராகும்.
இன்பத் தமிழில் நுனிப்புல் மேய்வார்
இலக்கிய மேலோடு
என்றே கூறி ஒதுக்கும் பயிறும்
ஏற்றம் தந்தவனே.
கன்னித் தமிழைக் கட்டளை நடையால்
காத்து வளர்த்தவனே!
கருத்துச் செறிவும் சொல்சிக் கனமும்
காட்டும் உரைவேந்தே
மன்னர் பின்னோர் மரபின் தவமே
வாய்மை வளர்த்தருளே
மணமது மாசறு வருமாணிக்க
வாய்மை வளர்த்தருளே.

இனியொரு விதியை யானே செய்வேன்
எல்லா மக்களுமே
இயன்ற வரையில் பொய்மைக் குறைத்தால்
இதயம் ஓங்கிடுமே.
தனியொரு மனிதன் வாய்மை வளர்ப்பதென்
தமிழின் பயனாகும்
சத்திய சோதனை அனைவரும் செய்தால்
தாய்நா டுயர்ந்துவிடும்.
எனவுரை தந்தாய் வாய்மை உறவே
எனக்கும் காந்திக்கும்
என்று மொழிந்தாய் இதுவரை உன்போல்
எவரையும் கண்டதில்லை.
மனித மனத்தின் மாற்றமும் கதிரக!
வாய்மை வளர்த்திடுனே
மமதை மாசறு வடுமாணிக்க
வாய்மை வளர்த்திடுனே.

உலகம் வாழ முரசு முழங்கி
உண்மை உரைத்தவனே
ஒலிக்கற் பாலே தமிழை வளர்க்கும்
ஊக்கம் பெற்றவனே
பலரும் போற்ற வாய்மைக் கொள்கோள்
பர்மிய நாட்டினிலே
பதினெட்டாண்டுப் பருவம் அதனில்
பயிர்செய் துயர்ந்தவனே.
இலமும் நாடும் உலகும் போற்றக்
ஒன்றாய் நின்றவனே
சொன்னைச் செம்மை கொள்கோள் நெஞ்சம்
கொண்டு வளர்ந்தவனே
மலரும் தமிழே! வாழ்வின் பயனாம்
வாய்மை வளர்த்தருளே
மனமது மாசற வடிமணக்க
வாய்மை வளர்த்தருளே.

தன்னே ரில்லாத் தமிழைத் தோளில்
தாங்கி நடந்தவனே
தன்னை உயர்த்திய தமிழை உயர்த்தித்
தலைமேல் வைத்தவனே
மன்னவராயினும் தன்னிலை திரிந்தால்
வாழ்வில்லை என்றவனே
வாய்மை உறவில் காந்தியா ரிடனே
வாழ்க்கைப் பட்டவனே
பெண்ணே போலக் காலம் பொழுதைப்
போற்றி இருந்தவனே
புத்தகம் இருந்தால் புத்தக மாகும்
புகழ்வீ டென்றவனே

மண்ணுயிர் காக்கத் தன்உயிர் தந்தவன்
வாய்மை வளர்த்திடுளே
மனமது மாசற வருமா னிக்க
வாய்மை வளர்த்திடுளே



தகுதியுரை

அண்ணாமலை என்னும் பிள்ளைத் திருப்பெயர் கொண்ட பேராசிரியர் முனைவர் **வ.சுப.மாணிக்கனார்** அவர்கள். 17-4-1917-இல் புதுக்கோட்டை மாவட்டம், மேலைச் சிவபுரியின் புகழ் விளக்காகத் தோன்றினார். திருவாளர் சுப்பையாச் செட்டியார் திருமதி தெய்வானை ஆச்சியார் ஆகியோர்க்கு அருமகனாய், தமிழ்த் தாய்க்குப் பெருமகனாய்ப் பிறந்து, திருமதி ஏகம்மை ஆச்சியார் அவர்களின் அன்புறு கணவராய்த் திகழ்ந்து சிறந்த பெருந்தகை. தகுதி சான்ற பேராசிரியராய், கல்லூரி முதல்வராய், துணைவேந்தராய் வளர்ந்து சிறந்தவர்.

புலவர் தொடங்கி டி.லிட்., பட்டம் வரை பெற்ற பெருமகனார். வள்ளுவம் இது என்று வரைந்து காட்டியவர். வள்ளுவர் வரைந்து காட்டிய அறவழி வாழ்ந்த [illegible]ண்ணல். தனித் தமிழ் நலம் பேணும் தன்மான ஏந்தல். புதுச் [illegible] பலவற்றைப் புனைந்த புகழ்வளர் அறிஞர். நவில்தொறும் நயம் வழங்கும் நூல்களின் படைப்பாளர்.

வள்ளுவமும் தமிழும் இவரால் வளர்ந்தன. தமிழியக்கம் இவரால் தழைத்தது. இம்மாபெரும் மாணிக்கம் அண்மையில் மறைந்தது.

மறைந்தும் மறையாத இம் மீமாந்தரின் திருக்குறட் பணியைப் போற்றும் தமிழக அரசு, 1989-ஆம் ஆண்டிற்குரிய

"திருவள்ளுவர் விருது"

வழங்கிச் சிறப்பிக்கின்றது.

கல்வியமைச்சர் முதலமைச்சர்

9.வள்ளுவப் பருவம்

9. வள்ளுவப் பருவம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததால் நீஇன்று
வள்ளுவப் பொருளாகினாய்
வாழ்கின்ற முறைப்படி வாழ்வதே வாழ்வென்று
வாழ்ந்துங் காட்டிவிட்டாய்
கைவைத்த தாலெலாம் புத்துரை புனையநீ
கருதியே நயமுரைத்தாய்
கம்பனார் காட்டாத களமெலாம் கண்டுநீ
காவியம் வாழவைத்தாய்
பொய்வைத்த நெஞ்சினர் பெருஞ்செல்வ ராயினும்
பொருளென மதிக்கமாட்டாய்
புதுக்கவிதைப் பகைவனாய் மரபுவழி மாறாமல்
புதுப்புதுக் கவிஉரைப்பாய்
வையகம் காக்கவரு மாணிக்க மாமணி
வள்ளுவம் பேசியருளே
வருகைச் செந்தாரன் திருநீ றணிந்தவன்
வள்ளுவம் பேசியருளே.

பிறன்மனை நோக்காத பேராண்மை என்று இறை
பேசியதை நீ உணர்ந்தாய்
பெருமையாய் வாழ்க்கையில் கடைப்பிடித் தாயதைப்
பேச்சிலும் கூறிநின்றாய்.
அறவாழி அந்தணன் தான் என்று மறவாத
அன்பினால் நீ உயர்ந்தாய்
அறவழியில் வாராத அந்தத் திருவும் வறுமை
அதுவே சிறந்ததென்றாய்
திறனுடன் தீதின்றி வந்தபொருள் ஈட்டினாய்
திருக்குறள் வழிநடந்தாய்
திருவாய் மொழியதிற் குறள்பேசி னால்நாங்கள்
திருந்த வாய்ப்புள்ள தன்றோ
மறத்துக்கும் அன்பே துணையென் றுரைத்தால்
வள்ளுவம் பேசியதோ
வருநாளைச் சௌந்தரன் திருநீ றணிந்தவன்
வள்ளுவம் பேசியதோ.

இருள்சேர் இருவினை சேராமல் மாற்றிடும்
இறைவனைப் பற்றி நின்றோம்
எம்பிரான் நீதந்த தமிழ்க்குடி சொன்னபடி
இனிவாழக் குறளுரைத்தோம்
திருக்குறள் வரப்பண்ணித் தேவாரம் பாடினோம்
சிலம்பையும் நடித்துவிட்டோம்
சிறப்பான சங்கநூல் போற்றினோம் அகத்தமிழ்
தெளிவுறப் படித்திருந்தோம்.
அருள்மிகும் ஆழ்வார்கள் மொழியிலே நிற்கின்றோம்
அருங்குறுந் தொகைபடித்தோம்
ஆண்டவன் கீதையொடு திருக்குரான் விவிலியம்
அவைசொன்ன வழிநடப்போம்
மருள்தரும் மனம்மாற மாணிக்கச் செல்வ! நீ
வள்ளுவம் பேசியருளே
வருராசைச் சுந்தரன் திருநீறணிந்தவன்
வள்ளுவம் பேசியருளே.

கூற்றின் அளவினிற் தீதென் றதுபோல
அளவுடன் அறம்புரிந்தாய்
அனைத்தையும் அஃதவன் றுரையாத பெருமையை
அறிவினால் நீ புகழ்ந்தாய்.
போற்றியே பொருள்காத் தறம்செய்ய வேண்டுமெனப்
பொறுப்புடன் எடுத்துரைத்தாய்
பொருளிலார்க் கிவ்வுலகம் இல்லையென் றேசொன்ன
பொன்மொழியை நினைவூட்டினாய்
காற்றிலே அறமெல்லாம் பறக்கின்ற காலத்தில்
காப்பாற்ற நீ பிறந்தாய்
காட்சிக் கெளியனாய் வள்ளுவன் பேரனாய்க்
கையிலே கோலெடுத்தாய்
மாற்றாரும் போற்றுவடி மாணிக்கச் செம்மலே
வள்ளுவம் பேசியருளே
வையகம் வாழ்த்தவே பொய்சொலா மாணிக்கம்
வள்ளுவம் பேசியருளே

தோன்றில் புகழொடு தோன்றுக இல்லையேல்
தோன்றாமை நல்லதென்று
சொன்னதை வாழ்வுமொழி ஆக்கியே நாடெலாம்
தோன்றிநீ புகழ்விரித்தாய்
சான்றோர் புகழ்ந்திடும் சிங்கப்பூர் மலேசியா
சப்பானுடன் கனடா
தமிழ்கூறும் பர்மா இங்கிலாந் தித்தாலி
தகவுடன் சுற்றி வந்தாய்
நின்றதாய் நாட்டினில் தாய்மொழிக் கல்வியே
ஏற்றதென் றறிந்து கொண்டாய்
இங்குள்ள பல்கலைக் கழகங்கள் வாழவே
இனியவழி நீ காட்டினாய்
வான்புகழ் பெற்றவன் தேன்தமிழ் கற்றவன்
வள்ளுவம் பேசியருளே
வையகம் காக்கவரு மாணிக்க மாமணி
வள்ளுவம் பேசியருளே.

நன்றி மறப்பது நன்றன் றென்னும்
நல்லுரை கேட்டமையால்
நன்றுமி குநாளன் கதிரே சன்பெயர்
நாளும் உரைப்பவனே
என்றும் விளங்கக் கதிரகம் என்றே
இல்லம் அமைத்தவனே
என்னை அவன்மேல் பிள்ளைத் தமிழ்பா(டு)
என்றே சொன்னவனே
பொன்றாப் பெருமைச் சாமிநாதனைப்
போற்றி மகிழ்ந்தவனே
புகழாம் கன்னி மணந்த நாதன்
புகழைச் சொன்னவனே
மண்ணில் என்றும் நன்றி விளங்க
வள்ளுவம் பேசுகவே
மாசறி யாத வாசப மாமணி
வள்ளுவம் பேசுகவே

தன்னைச் சரிவது பொய்யற்க எனும்
தமிழ் போல் வாழ்ந்தவனே
தமிழ்வழி பாடே இறைவழி பாடெனச்
சரித்திரம் கண்டவனே
முன்னோர் வழியில் பிள்ளை யார்சுழி
முதலில் போடாமல்
மூத்த தமிழைத் 'த'வென எழுதி
மொழியைக் காத்தவனே
கன்னித் தமிழைக் கல்வித் தமிழாய்க்
காத்து வளர்த்தவனே
காலம் செப்பாய் கண்டது மொழிவாய்
கவிதைப் பேராறே
மன்னா உலகில் மன்னுதல் பெற்றவன்
வள்ளுவம் பேசுகவே
மாசறி யாத வாதப மாமணி
வள்ளுவம் பேசுகவே.

எண்ணித் துணிக கருமம் என்பதை
இயல்பாய்க் கொண்டவனே
எண்ணிய எண்ணியாங் கெய்தி நடக்கும்
ஏற்றம் மிக்கவனே.
திண்ணிய ராகப் பணிபல ஏற்றுச்
செம்மை சேர்த்தவனே
செறிந்த நடையில் வள்ளுவம் எழுதிச்
சிறப்பைப் பெற்றவனே.
கண்ணின் மணியே வண்ணத் தமிழே
காவிய மானவனே
காசு கொடுத்துக் குறளைப் படிக்கக்
கற்றுக் கொடுத்தவனே
மண்ணில் தீமை எண்ணம் மறைய
வள்ளுவம் பேசுகவே
மாசறு யாத வாசுப மாமணி
வள்ளுவம் பேசுகவே

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் என
ஓங்கி வளர்ந்தவனே
உண்மை, இறைவன், திருவாசகமென்(று)
உயிர்மூன் றானவனே.
கள்ளமி லாத மனிதர்க் கென்றும்
கடவுள் உதவிடுவார்
கண்டேன் என்றன் வாழ்க்கையி லென்று
காட்டி மகிழ்ந்தவனே.
வெள்ளம் போலச் சொல்மழை பொழியும்
வித்தகம் பெற்றாலும்
வேடம் நீக்கி விளங்கிப் பழக்க
மெய்நூல் தந்தவனே.
வள்ளல் அழகன் வளர்த்த தமிழே
வள்ளுவம் பேசுகவே
மாசறு யாத வாசப மாமணி
வள்ளுவம் பேசுகவே.

மனத்துக் கண்ணே மாசிலன் ஆதல்
வாழும் அறமென்றே
மற்றவர் அறியாத் தற்சிந் தனைகள்
வளரச் செய்தவனே.
இனிமைத் தமிழை எழுதிச் சேர்க்க
இருகை பெற்றவனே
ஏடுகள் வாங்கில் கேடுகள் நீங்கும்
என்றே சொன்னவனே.
தனியே இருந்து இறையாய் உயர்ந்து
தமிழைத் தந்தவனே
சங்கப் புலவர் செய்தவ மாகத்
தரணியில் வந்தவனே.
மனிதப் பிறவியைப் புனிதம் ஆக்கிட
வள்ளுவம் பேசுகவே
மாசறி யாத வாசக மாமணி
வள்ளுவம் பேசுகவே.


தற்சிந்தனைகள்
நீதி நூல்கள்
உரை
வ.சுப. மாணிக்கனார்
தொல்காப்பியப் புதுமை
தமிழ்க் காதல்
காப்பியப் பார்வை
டாக்டர் வ.சுப.மாணிக்கம்
இலக்கியச் சாறு
கொடை விளக்கு
மனைவியின் உரிமை
ஒப்பியல் நோக்கு
டாக்டர் வ.சுப.மாணிக்கம்
திருக்குறட் சுடர்
மணிமேகலை
தொல்காப்பியக் கடல்
வள்ளுவம்
ஒருநொடியில்
டாக்டர் வ.சுப.மாணிக்கம்

10.வாசகப் பருவம்

10. வாசகப் பருவம்

தந்ததுன் தன்னைநீ கொண்டதென் தன்னையெனத்
தமிழ்ச்சிவப் பணிபுரிந்தாய்
தமிழ்நூற்கள் ஆயிரம் கற்றாலும் வாசகர்
தமிழிலே ஈடுபட்டாய்
கற்றனர் தந்தைமகிழ் ஆனந்தவா சகத்துக்குக்
கதிர்மணி விளக்கமிந்த
கதிரேசன் திருச்சதகம் நீத்தல்விண் ணப்பம்நயம்
காட்டுதிரு வெம்பாவையும்
முந்தைநாள் கேட்டதால் திருவா சகம்உயிர்
மூச்சைக் கொண்டு நின்றாய்
முன்வந்து வேண்டினேன் உன்வாயால் வாசகம்
முற்றோதல் செய்ய வேண்டும்
வந்தவழி சொல்லியே செல்லவழி காட்டிடும்
வாசகம் உரைத்தருள்கவே
மதுரையில் துணைசேர்ந்தாய் அண்டமிர் மாணிக்க
வாசகம் உரைத்தருள்கவே.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
மனமெலாம் நீ நிறைந்தாய்
வளமார் செழுந்தமிழ் நயமாய் உரைப்பதில்
வல்லவன் ஆகி நின்றாய்.

வானோக்கி வாராமல் திசை நோக்கி வளர்கின்ற
வளர்ச்சி என்றே உரைப்பாய்
வளர்த்தமிழ் நாடென்ற பெயர் தமிழ்நாடென்று
மக்களுக்கு உரைத்திடுமென்றாய்

தேனாய் இனிக்கின்ற சொல்லாட்சி கொண்டநீ
திருவாசகம் உரைத்தால்
சிவமணம் கமழுமே மனமாக நீடுமே
செந்தமிழ் நாடுயருமே.

மாணாட ஆடுவோன் தாளை ஏத்து திரு
வாசகம் உரைத்திடுங்களே
மதுரையில் துணைவேந்தாய் ஆண்டவர் மாணிக்க
வாசகட்கு உரைத்தனர்களே.

நாயேனைத் தன்னைப்புகழ் பாடுவித்த நாயகனை
நாளெலாம் போற்றிநின்று
நல்லசிவ பக்தியை வெளியினில் காட்டாத
நாயகிக் கற்புநெறிப்
பேயேன தன்னைப் பிழையெலாம் பொறுக்கின்ற
பெருமையில் நெஞ்சமொன்றிப்
பேசுதிரு வாசகம் மாசெலாம் எரிக்கத்
பெரிய நிலை பெற்றுயர்ந்தாய்
தாயான இறைவனின் முன்னின்று பேசநீ
தற்சிந் தனைபுரிந்தாய்
தக்கதிரு வாசகம் என்னுடைய வாழ்வென்று
தமிழிலே ஆணையிட்டாய்
வாயாரத் தமிழ்பாட வந்தநீ யாம்வாழ
வாசகம் உரைத்தருள்கவே
மதுரையில் துணை வேந்தாய் ஆண்டசீர் மாணிக்க
வாசகம் உரைத்தருள்கவே.

கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் அமையுமெனக்
கருத்துடன் சொன்ன வாக்கு
கனிந்தமணி வாசகர் நிலைமைக்குச் சரி அதன்
கல்விக்குப் பொருத்தமில்லை.
சற்றுநான் மாறினேன் சார்ந்தவனையும் கற்கின்ற
தன்மையே வேண்டுகின்றேன்
யாவரும் தமிழ்படித் திட வேண்டும் என்றுநீ
சரித்திரம் படைத்துவிட்டாய்
அற்றவர்க் கற்றசிவன் அண்ணாமலை உன்னை
அன்பினால் ஆண்டுகொண்டான்
அவனிடம் நீ கேட்ட அத்தனையும் தந்துனை
ஆளாக்கி வைத்துவிட்டான்
மற்றவர் அறியாத மாணிக்க மாமலை
வாசகம் உரைத்தருள்கவே
மதுரையில் துணைவேந்தாய் ஆண்டசீர் மாணிக்க
வாசகம் உரைத்தருள்கவே.

வினையென் போல உடையார் பிறரார்
விடைமேல் வருவானே
விரைவாய் ஆள்வாய் எழுந்திரு வாசக
வேழகை பிறந்தவனே
கனவில் ஏதும் கெடுதல் வந்தால்
கடவுள் திருநீற்றைக்
கனிவாய்ப் பூசித் திருவாசகத்தைக்
கருதி உரைப்பவனே
இனிமை மிக்க திருவாசகமே
இன்னுயிர் எனவாழும்
எங்கும் கெட்ட கனவோ என்றே
இறைவனைக் கேட்டவனே
மனமே கோயில் எனவாழ்ந்தவனே
வாசகம் சொல்வாயே
வளரும் தலைமுறை தொழுமாணிக்க
வாசகம் சொல்வாயே

மின்னே ரனைய பூங்கழல் அடைய
வேட்கை மிகுந்தவனே
வேண்ட முழுதும் தருவோய் என்றே
விரும்பி நின்றவனே
என்னால் அறியாப் பதந்தந் தாயென
எண்ணி மகிழ்ந்தவனே
என்றான் கெட்ட திரங்கி டாயென
இறையைக் கேட்டவனே.
அன்னை ஆண்டுதன் அடியரில் கூட்டிய
அதிசய மானவனே
அதுபழச் சுவையென அமுதென ஈசன்
அருகில் நின்றவனே
மன்னா உன்றன் வாய்மைத் திருவாய்
வாசகம் சொல்வாயே
வளரும் தலைமுறை தொடுமா ணிக்க
வாசகம் சொல்வாயே.

இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்
என்று நினைத்தவனே
இறையவன் என்னைக் கைவிட வில்லை
என்று மகிழ்ந்தவனே
கரங்கள் இரண்டும் தமிழ்நூல் தாங்கக்
காட்சி கொடுத்தவனே
கடவுட் பற்றும் தமிழும் ஒன்றாய்க்
கலந்து பிறந்தவனே
அரங்கம் தோறும் தமிழ்முர சோச்சும்
ஆற்றல் மிக்கவனே
அலைமகள் நாணக் கலைமகள் வாழ
அறிவை வளர்த்தவனே
மருங்கே சார்ந்து வருபவர் கேட்க
வாசகம் சொல்வாயே
வளரும் தலைமுறை தொழுமா ணிக்க
வாசகம் சொல்வாயே.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்ப் பெய்தி
விரையார் மலர்ப் பாதம்
வேண்டித் தொழுவது பிறர்க்குத் தெரிய
வேண்டாம் என்றவனே

கைகள் இரண்டும் புத்தக மூட்டை
கனிவாய்ச் சுமந்திடவே
காலால் அலைந்து தமிழக மெங்கும்
கடுகி நடந்தவனே

பொய்சொல் லாத மாணிக்கம் எனப்
புலவர் போற்றிடவே
பொன்தரு பர்மாக் கடையை விட்டுப்
புகழைப் பெற்றவனே

வையகம் போற்றும் உன்திரு வாயால்
வாசகம் சொல்வாயே
வணங்கும் தலைமுறை தொழு மாணிக்க!
வாசகம் சொல்வாயே.

வேண்டத் தக்கது அறிவோய் நீயென
வேண்டா திருந்தவனே
வேண்ட முழுதும் இறைவன் கொடுக்க
விரும்பித் தொழுதவனே
பாண்டி மதுரையில் துணைவேந் தென்று
பாரோர் புகழ்ந்தாலும்
படரும் எளிமைக் கவசம் பூண்டு
பணிகள் செய்தவனே
மீண்டும் பதவி வேண்டா மென்று
விட்டு நடந்தவனே
மேலோர் போற்றும் மணிவா சகர்மேல்
விருப்பம் மிக்கவனே
மாண்ட பிறகும் துணையாய் வரும்திரு
வாசகம் சொல்வாயே
வளரும் தலைமுறை தொழ, மாணிக்க!
வாசகம் சொல்வாயே

கதியடி யேற்குன் கழல்தந் தருளனைக்
கருதி உரைத்தவனே
கற்பனை கடந்த கடவுளை நெஞ்சில்
கண்டு மகிழ்ந்தவனே
பதியெனும் கோயில் தில்லை மன்றில்
பட்டினி கிடந்தவனே
பாடும் திருமுறை நாடா மன்றனைப்
பலகால் நொந்தவனே
அதியன் பார்க்கு அதிகன் அழகன்
அன்பில் வளர்ந்தவனே
அப்பா! நீ திரு வாசகம் பாட
அன்பால் வேண்டுகிறேன்
மதியும் திறனும் வாய்மையும் உடையாய்
வாசகம் பாடுகவே
வளரும் தலைமுறை தொழுமோணிக்க
வாசகம் பாடுகவே

சில குறிப்புகள்

பக்க எண்	விளக்கம்
4.	மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் எழுந்தருளி இருப்பவர் சாமிநாத விநாயகர்.
5	மேலைச்சிவபுரி சுப்பையா கோயிலில் இருந்து ஏறத்தாழ 400 ஆண்டுகளாகப் பழனிமலைக்குப் பாத யாத்திரையாக எடுத்துச் செல்லப்படும் வேல்.
6	கணியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்ற நாட்டு மகிபாலன்பட்டி, மாணிக்கனாரின் ஆசிரியர் பண்டித மணி பிறந்த ஊர்.
8.	மாணிக்கனார் வயிரவன் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்.
10.	ஐயா எழுதிய வள்ளுவம் 12 சொற்பொழிவுகள் கொண்டது.
11.	ஐயாவை வளர்த்தவர் தாய்வழிப் பாட்டனார் அண்ணாமலை செட்டியார். ஐயா எழுதிய நூல் தொல்காப்பியப் புதுமை.
12.	காந்தி மறைந்த மாலைப்பொழுதில் வழிபாடு செய்தவர் மாணிக்கனார்.
15.	வ.உ.சி. வரலாற்றைக் காவியமாகப் பாட நினைத்த மாணிக்கனார் அதற்குச் சுதந்திரச் செக்கு என்று பெயரிட்டார். அது முற்றுப் பெறவில்லை.
17.	ஐயாவின் குடும்பத்தினர் - சாரங்கபாணி உற்ற நண்பர் - பதிப்புச் செம்மல் மெய்யப்பனார் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர்.
18.	ஐயாவின் ஆசிரியர்கள்
19.	பொன்மனச் செம்மல் - புரட்சித் தலைவர் எம்.ஜி. ராமச் சந்திரன் அவர்களால் மாணிக்கனார் போற்றப் பெற்றார்.

பக்க எண்	விளக்கம்
20	மாணிக்கனார் இல்லத்தின் பெயர் கதிரகம்.
25	மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தந்த பட்டம் செம்மல் - அண்ணன் திருப்பதிச் செட்டியார் மீது எங்கள் குல முதல்வன் எனத் தொடங்கி வெண்பா பாடியவர் மாணிக்கனார் - பிள்ளைகள் பெண்கள் யாவருக்கும் இலக்கியம் போற்றும் தனித்தமிழ்ப் பெயர் சூட்டியவர் ஐயா.
26	விருப்ப முறியில் ஊர்ப்பொது மக்கள் நலனுக்காகச் சொத்தில் ஆறில் ஒரு பங்கு ஒதுக்கி வைத்து எழுதியவர் ஐயா.
31	ஐயா எழுதிய வாழ்க்கை நிகழ்வுகள் தற்சிந்தனைகள் என்ற பெயரில் வெளியிடப் பெற்றன.
33	பாரிக்குக் கபிலர் போல வள்ளல் அழகப்பருக்கு வாய்த்த புலவர் வ.சுப. மாணிக்கனார்.
39	தமிழ் + ஆங்கிலம் = தமிங்கிலம்
42	குன்றக்குடி அடிகளார் மாணிக்கனாருக்கு முதுபெரும் புலவர் பட்டமளித்துப் பாராட்டினார்.
44	திருக்குறள் தேசிய நூலாக வேண்டும் என்றவர் மாணிக்கனார்.
46	நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை எனத் தொடங்கி மாணிக்கனார் எழுதிய பாடல் அவருடைய வாழ்வின் நோக்கத்தை விளக்குவதாய் அமைந்தது.
48	நூலை முழுமையாகப் படிக்க வேண்டும் என்பது அவர் கொள்கை.
49	நூலாசிரியர், மாணிக்கனார் அமைத்த கலைக் கழக உறுப்பினர்
53	காரைக்குடிக்குப் புகழ் சேர்த்த சான்றோர்கள்.

பக்க எண்	விளக்கம்
56	ஒருவன் வாளி என முடியும் கம்பராமாயணப் பாடல் வரியை ஒரு வன்வாளி எனப் பிரித்து உரை சொன்னவர் மாணிக்கனார்.
60	பட்டினத்தடிகள் நகரத்தார் மரபினர்.
64	சந்திரனுக்குரிய பெருமைகள் - தேய்மதியன் என்பது திருவாசகத் தொடர்.
66	சங்கநூல் புலமை மனதைக் குளிர்விக்கும்.
79	மாணிக்கனார் மஞ்சள் கோட்டை விரும்பி அணிவார்.
82	பதினெட்டு வயதில் பொய் பேச மறுத்துப் பர்மாக் கடையை விட்டு வந்தவர் மாணிக்கனார். இது பைந்தமிழ் வரவாயிற்று.
84	வள்ளுவப் பருவப் பாடல்கள் பத்தும் குறள்மொழிகளால் தொடங்குகின்றன.
90	தொடக்கத்தில் பிள்ளையார் சுழி போடாமல் தமிழின் முதல் எழுத்தான த என்ற எழுத்தை எழுதும் பழக்கமுள்ளவர் மாணிக்கனார்.
91	பிள்ளைகள் குறள் ஒப்பித்தால் காசு கொடுத்து ஊக்கப் படுத்தியவர் மாணிக்கனார்.
94	வாசகப் பருவப் பாடல்கள் பத்தும் திருவாசகத் தொடர்களால் தொடங்குபவை.
96	தன்னுடைய சிவபக்தியை வெளியில் காட்டாத நாயகிக் கற்புடையவர் மாணிக்கனார்.
98	கெட்ட கனவு வந்தால், திருநீறு பூசித் திருவாசகம் படி என்று தற்சிந்தனையில் வழிகாட்டியவர் மாணிக்கனார்.
103	அதியமானையும் பாரியையும் விட அதிகம் கொடுத்தவர் அழகப்பர்.



சொ.சொ.மீ. சுந்தரம்

வணிகவியலில் முதுகலைப்பட்டம் பெற்று மதுரை சௌராஷ்டிராக் கல்லூரியில் வணிகவியல் பேராசிரியராக 41 ஆண்டுகள் பணியாற்றிய வணிகவியல் தொடர்பான நூற்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிய பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம், தமிழ்ச்செம்மல் வ.சுப. மாணிக்கனார், கம்பனடிப் பொடி ஆகியோர் தூண்டுதலால் தமிழ் படித்துப் பல நூறு கவியரங்குகளில் பங்கேற்றவர். 1981ல் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் 408 கவிஞர்கள் கலந்து கொண்ட பொற்கிழிக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். கவியரசர் கண்ணதாசனால் சொல்லுக்கு சொல் மீறும் சுந்தரம் என்று பாராட்டப் பெற்றவர்.

இருமுறை கயிலாய யாத்திரை செய்தவர். 1976ல் காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் மீது திருநீறு விடு தூது பாடியவர். திருவாசகத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். இந்நூலுக்கு உரையெழுதிக் குறுந்தகடாக்கி வெளியிட்டவர். திருமந்திர வகுப்பு நடத்தியவர். ஆழ்வார்களும் கண்ணதாசனும், பண்டிதமணி பிள்ளைத் தமிழ், காசிப் பதியும் கங்கை நதியும் ஆகிய நூற்களை எழுதியவர்.

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, நேபாளம், ஜெர்மனி, பிரான்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு சென்று ஆன்மீக இலக்கியப் பேருரை ஆற்றியவர். திருவிசைப்பா, மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சொக்கநாத வெண்பா ஆகியவற்றுக்கு உரை எழுதியவர். மலேஷியாவில் ஈப்போவிலும் சிங்கப்பூரிலும், குழந்தைகளுக்கான ஆன்மிக பண்பாட்டு வகுப்புகள் நடத்தியவர்.

கந்தபுராணம், மகாபாரதம், கந்தரனுபூதி, திருப்புகழ், பன்னிருதிருமுறை, கம்பராமாயணம் ஆகியவற்றைப் பற்றி இவர் நிகழ்த்திய தொடர் சொற்பொழிவுகள் குறுந்தகடாகவும் வெளி வந்துள்ளன.